விலை : 20.00
பக்கங்கள் : இருபது

03 JAN 2013
பொது சன நூலகம்

# வலம்புரி

Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 19 வியாழக்கிழமை (03.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

# நீதிமன்றம் சென்றால் எம்.பிகள் மீது நடவடிக்கை

## பிரதி சபாநாயகர் அறிவிப்பு

**(கொழும்பு), பிரதம நீதியரசரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கச் செல்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் அனுமதி இன்றி நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்கச் செல்லமுடியாது எனவும் அவர் கூறினார்.**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்திற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி இன்றிச் சென்றால் அது அரசியல் அமைப்பின் நாலாவது உறுப்புரையையும் நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமையில் 17ஆவது பிரிவையும் மீறுவதாகவே அமையும்.

அவ்வாறானவர்களுக்கு எதிரான தணிக்கைப் பிரேரணையை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினராலும் கொண்டுவர முடியும் எனவும் பிரதி சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ரிட் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த அரசாங்க உறுப்பினர்கள் நீதிமன்றில் ஆஜராக மாட்டார்கள் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர்டிலான்பெரேராவும் அரசாங்கஉறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செல்ல மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் மற்றும் சபாநாயகரை நீதிமன்றத்தில் இன்று 3-ம் திகதி ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அறிவிப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெறவுள்ள வழக்கு விசாரணையில் தமது கட்சிப் பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர் கலந்துகொள்வார் என ஜனநாயக தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு இன்று நீதிமன்றம் செல்லும்

பிரதம நீதியர்சரை குற்றம்சாட்டி பதவி நீக்கம் செய்ய எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்களில் சிலர் நீதிமன்றத்தின் அறிவிப்பை ஏற்று தமது கருத்துக்களை தெரிவிக்கவுள்ளனர்.

அக்குழுவில் அங்கம் வகித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இன்று மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

உறுப்பினர்கள்தமதுகருத்துக்களைதெரிவிக்க வருமாறு அறிவிப்பை மட்டுமே மேல் முறையீட்டு நீதிமன்றம் வெளியிட்டது என்றும் அது அழைப்பாணை அல்ல என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டுகிறார்.

இதேபோல அக்குழுவில் எதிர்க் கட்சிகள் சார்பில் அங்கம் வகித்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகி தம் கருத்தை அளிக்க உள்ளதை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க உறுதிப்படுத்தினார்.

தலைமை நீதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவுக்கு பதிலளிக்க இலங்கை தயார்

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான அரசியல் குற்றப் பிரேரணை குறித்து ஐக்கிய நாடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்கு தமது பதிலை அனுப்புவதற்கு இலங்கை அரசு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளியுறவுத்துறை அமைச்சின் சார்பாக பேசவல்ல சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இது குறித்து ஊடகங்களுக்கு விபரிக்கையில் எதிர் வரும் சில தினங்களில் தமது விளக்கத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பவுள்ளதாக கூறினார்.

ஐக்கிய நாடுகளின் சுயாதீன நீதியரசர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் விசேட பேச்சாளர் கேப்ரியலா க்னவுல் அண்மையில் பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

குற்றப்பிரேரணை (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை-சீனா கூட்டு இந்தியா அச்சம்

இலங்கையின் ஒத்துழைப்புடன் சீன அரசாங்கம் சர்வதேச கடற்பரப்பில் கனிய வளங்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலான சட்டமூலம் ஒன்றைத் தயாரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் அரச தகவல்களை மேற்கோள் காட்டி, த ரைம்ஸ் ஒப் இந்தியா இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தின் மூலம் இந்து சமுத்திரத்தையும் ஆராய்ச்சி செய்ய அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்தச் சட்டமூலம் தொடர்பில் இந்தியாவின் புதுடில்லி அரசாங்கம் கண்டனம் (20ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவர் சிவசங்கர் மீது தொடர்ந்தும் விசாரணை!

மருத்துவர் இ.சிவசங்கர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினமும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படாத மருத்துவர் சிவசங்கர் தொடர்ந்தும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 29-ம் திகதியன்று கைது செய்யப்பட்ட மருத்துவர் 5 நாட்களாகியும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை.

இன்னும் அவர் குறித்த விசாரணைகள் முடியாததால் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மருத்துவர், வவுனியாவில் உள்ள பயங்கரவாத குற்றத் தடுப்பு அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்படாமல் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்தே பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இராணுவத்திற்கு எதிராக செயற்பட முனைந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதாகியுள்ள மருத்துவர் மீது மேலும் பல குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவர் கைதாகி 5 நாட்கள் ஆகியுள்ள நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

# சிலிண்டர்களுடன் சென்ற வாகனம் தடம்புரண்டது



எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்களுடன் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் சாரதியும் அதில் பயணித்த மற்றொருவரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சிலிண்டர்கள் எதுவும் இவ்விபத்தில் வெடிப்பை ஏற்படுத்தாமையால் அங்கு நிகழவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சுமார் 100 இற்கும் மேற்பட்ட எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்களை ஏற்றியபடி ஹண்டர் ரக வாகனமொன்று பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கி ஏ35 வீதியால் பயணித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகரப் பகுதிக்குள் இந்திய வியாபாரிகளுக்கு தடை

## முதல்வர் அறிவிப்பு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இந் திய வியாபாரிகளின் வியாபார நடவடிக்கை தடை செய்யப்பட்டுள்ளது என மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அத்துடன் நடைபாதை வியாபாரமும் யாழ். முதல்வரினால் தடை செய்யப்பட்டுள்ளது என யாழ் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் இன்று தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபாதை மற்றும் இந்திய வியாபாரிகளால் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதாக வணிகர் கழகத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இந்த பிரச்சினைகள் பற்றி வணிகர் கழகம் யாழ். முதல்வர் மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்தது.

இதனை அடுத்து யாழ். மாநகர சபையினால் இதனைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயங்களில் கவனம் செலுத்துமாறு யாழ். பொலிஸ் நிலையத் (20ஆம் பக்கம் பார்க்க)

## மின்னொழுக்கினால் வீடு எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

மின்னொழுக்குக் காரணமாக வீடொன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில் பல உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரிவீதியிலுள்ளவீடொன்றிலேயே நேற்று மாலை 5.30 மணிக்கு இத்தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் அனர்த்தத்தில் எவருக்கும் காயம் ஏற்படாத போதும் வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த வர்த்தகத்திற்கான கடதாசிப் பொருட்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன. இதனால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிவருகின்றது.

இத் தீ அனர்த்தத்தினால் சுமார் அரை மணித்தியாலம் வரை அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்ததுடன் பெரும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தது.

எனினும்தீயணைப்புப்படையினர்விரைந்து செயற்பட்டதால் அயலில் நிகழ இருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

# சிங்கள மொழி கற்பிப்பதற்கு படையினர் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இரண்டாம் மொழியான சிங்கள மொழி கற்பிப்பதற்கு இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு சிங்கள மொழியினை கற்பிப்பதற்கு ஜனாதிபதி செயலணியே அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஜனாதிபதி செயலணியினால் வழங்கப்பட்ட கடிதத்தினைக் கொண்டு கிளிநொச்சி மற்றும் முல்லை மாவட்டங்களின் கல்வி வலயங்களுக்கு படையினர் சென்று கற்பிப்பதற்கான அனுமதி கோரலில் தற்போது ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் மொழி கற்பித்தல் தரம் 5 முதல் உயர்தர வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (எ-4)

## சிவபூமியில் புதிய மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் இவ் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கோண்டாவில் சிவபூமி பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இதற்கு 5 வயது நிரம்பிய விசேட தேவை உடைய இருபாலாரும் விண்ணப்பிப்பதோடு அவர்கள் தொடர்பான மருத்துவக் குறிப்பும் அவசியமாகும்.

நேர்முகப்பரீட்சையின் போது பெற்றோர் மாணவர் ஆகியோர் கலந்துகொள்ள வேண்டும். மேலும் பாடசாலை அனுமதி தொடர்பாக எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லையெனவும் பாடசாலை நாட்களில் சிற்றுண்டி, மதிய உணவு இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# ஆண்மையை அகற்றுவதற்கு திருமாவளவன் எதிர்ப்பு

(சென்னை)

பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் ஆண்களின் ஆண்மையை நீக்க வேண்டும் என்று தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா வழங்கியிருக்கும் ஆலோசனைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாலியல் வன்முறை தொடர்பாக தமிழக அரசு செய்துள்ள சில அறிவிப்புகள் ஏற்கத்தக்கவையாக இருந்தாலும் பல ஏற்கத்தக்கவையாக இல்லை.

பாலியல் வன்முறைகளைத்தடுக்கும் நோக்கோடு தமிழக அரசு சில அறிவிப்புகளை செய்திருக்கிறது. காவல் துறையினருக்கு பெண்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பாலியல் வன்முறை வழக்குகளை விசாரிக்க நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் வலியுறுத்திவந்தது.

தற்போது தமிழக அரசின் அறிவிப்பில் இந்த இரண்டு நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. இதற்காக தமிழக அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. (எ)

## குற்றவாளிக்கு உதவிய இரு பொலிஸார் கைது

(குருமண்காடு)

வவுனியாவில் குற்றவாளிக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோக உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோரே நீதிமன்றத்தினால் விளக்க மறியலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வவுனியாவில் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் விடுதியொன்றில் சிறுமியுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட வயோதிபர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜராக்கப் பட்டு விசாரணை நடைபெற்று வந்துள்ளதுடன் குறித்த நபரின் கடவுச்சீட்டு நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில்மோசடியான முறையில் இவ் வழக்கிலிருந்து மேற்படி வயோதிபர் விடுதலையாக இப் பொலிஸார் உதவியுள்ளமையினாலேயே இவர்கள் விளக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குற்றவாளியான வயோதிபர் தனது கடவுச் சீட்டினை பெறுவதற்காக, நீதிமன்றத்திற்குச் சென்ற போதே இவ்விடயம் அம்பலமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-9,250)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்




A/C
DIGITAL dts SURROUND
விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்
விரைவில் அலெக்ஸ்பாண்டியன்
10.30, 2.30, 6.30, 9.30



வீடு விற்பனைக்கு

இராச வீதி, அச்சுவேலியில் இரண்டு பரப்பு காணியுடன் சகல வசதியும் கூடிய வீடுவளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே: 0776231509
(1380)



Spot Admission For UK

1. இலவச வழிகாட்டி
2. பகுதிநேர வேலைவாய்ப்பு
3. குறைவான கல்விக் கட்டணம்
4. IELTS அவசியம், அவசியமற்றது கற்கைநெறிகள்.
5. குறைந்த தகைமை G.C.E. (சா/த)
6. விசா கிடைத்தவுடனேயே கட்டணம் அறவிடப்படும்.

ஏனைய நாடுகள்
கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, சைபிரஸ், போலந்து, நியூசிலாந்து, ரஷ்யா, சுவிஸ்லாந்து, ஜோர்ஜியா

Read International 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மகேஸ் தொ.பே : 0772702628
அஸ்வின் தொ.பே : 0774848888
(1389)



பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(8-1278)



Great way

வடக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட "airtel" நிறுவனத்துக்கு Supervisor, Distributor பதவிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.
O/L, A/L சித்தி பெற்று இருப்பின் தொடர்பு கொள்ளலாம்.
25,000 - 35,000 சம்பளம் வழங்கப்படும்.
6 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர் தங்குமிட வசதி இலவசம்
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 075 0400477- ஸ்ரீகாந்த்
(1387)



உடனடி வேலைவாய்ப்பு

இன்றும் (03.01.2013) நாளையும் (04.01.2013) நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
நேரம் 9 a.m - 4 p.m

உடனடிப் பயணம்.
10 நாட்களுக்குள் பயணம்.

சம்பளம் 42,000 இற்கு மேல்.
உணவு, தங்குமிடம் அனைத்தும் இலவசம்.
வேலைவாய்ப்பு – சவூதி அரேபியா.
வேலை – சுத்திகரிப்பு இன்னும் பல இலகுவான வேலைகள்.

எமது இதர சேவைகள்:
- அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (Government Approved Manpower Agency)
- அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர் (அரபு, ஆங்கிலம், தமிழ்) (Government Approved Translator - Arabic, English & Tamil)
- முன்கூட்டிய ஆசனப்பதிவு, விமானப் பயணச்சீட்டுக்கள் (உடனுக்குடன்) (Reservation & Air Ticketing Agency)
- அரச அனுமதி பெற்ற உல்லாசத்துறை முகவர் (Government Approved Travel & Tourism Agency)

தொடர்புகளுக்கு:-
திரு.சிவசேகரன் சாகீஸ்வரன் 0774744204
உங்கள் மண்ணின் மைந்தன் திரு.சிவசேகரன் சாகீஸ்வரன்
வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ்,
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக,
இல.462, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

Main street Nintavur, Srilanka,
Tel & Fax:+94 67 56 77777
Mob:+94 77 106 7055, +94 777 046 755
Email:hr@rifraa.com, rifraa@gmail.com
Web:WWW.rifraa.com
RIFRAA INTERNATIONAL (PVT) LTD
Company Registration pv 72025
(SLBFE LABOUR LICENCE NO.2502)
(1388)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



அம்பலவன் பொக்கணையை சேர்ந்த எமது நண்பனும் ஆசிரியருமான திரு.போ.யோய்ஸ்குமார் அவர்கள் வவுனியா நீதி நிர்வாக வலய சமாதான நீதவானாக 31.12.2012 அன்று வவுனியா நீதவான் முன்னிலையில் பதவிப்பிரமாணம் பெற்றுக்கொண்டனர் அவரை நல்லதொரு சமூகசேவையாளனாக மென்மேலும் வளர்ந்திட மனதார வாழத்துகின்றோம்.

VITHU MEDICAL CENTER
SANTHI AMMAN KOVILADY
MULLIYAWALAI
MULLAITIVU

உரிமையாளர்
விது மெடிக்கல் & வேபி நீட்ஸ்
சந்தி அம்மன் கோவிலடி
முள்ளியவளை
(8-2018)

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?", என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

''சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் ''மாயை'' என்கிறேன். நீங்கள் என்னை அவமானப்படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... ''வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும்'' என்று கூறினார்கள்.

''சரி அவரிடம் போவோம்'' என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; ''உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

''நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்'' என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் 7 பேரும் அவர்களது படகில் நாடு திரும்பியுள்ளனர் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகு ஒன்று 7 மீனவர்களுடன் கடந்த 28 ஆம் திகதி நள்ளிரவு யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் கரையொதுங்கியிருந்தது. இயந்திரப் பழுது காரணமாக கரையொதுங்கிய மேற்படி படகு அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதோடு படகில் வந்த 7 இந்திய மீனவர்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டதோடு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்பின்பு கரையொதுங்கிய இந்திய மீனவர்களுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் இந்தியாவின் தமிழ்நாடு பாண்டிச்சேரியின் காரைக்கால் பகுதி மீனவர்கள் எனத் தெரிய வந்தது.

கடற்படையினரின் ஒத்துழைப்புடன் குறித்த மீனவர்களை அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதன் பிரகாரம் கரையொதுங்கிய இந்திய மீனவர்களான அருண்குமார், செட்டிராஜா, லக்ஸ்மன், செல்வமணி, ஆனந்தவேல், ஜெய்ஸ், ராகவன் ஆகிய 7 மீனவர்களும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, கரையொதுங்கிய இந்திய இழுவைப் படகினை இழுத்துச் செல்வதற்கு இந்தியாவிலிருந்து இரண்டு இழுவைப் படகுகள் வரவழைக்கப்பட்டதாகவும் இதற்கான அனுமதியை கடற்படையினர் பெற்றுக் கொடுத்தனர் எனவும் தெரிவித்தார்.

கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் 7 பேரையும் அவர்களது நாட்டுக்கு பாதிப்புக்கள் எதுவுமின்றி திருப்பி அனுப்புவதற்கு நீண்ட நேரமாக தாம் பாடுபட்டதாகவும் ஆனால், மீனவர்களைப் பார்ப்பதற்கோ அல்லது மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கோ யாழிலுள்ள இந்திய அதிகாரிகள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பாக யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் வி. மகாலிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் 7 பேரும் நாடு திரும்பியுள்ளனர் எனவும் மீனவர்கள் கரையொதுங்கிய போது அவர்களை நேரில் சென்று பார்வையிட முடியவில்லை எனவும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# 70 வீதமான சிறுவர்களுக்கு நித்திரையின்மை

(கொழும்பு)

நாட்டில் சுமார் 70 வீதமான சிறுவர்கள் நித்திரையின்மையால் அவதிப்படுவதாக சிறுவர் நரம்பியல் நிபுணர் வைத்தியர் அனுருத்த பதனிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

சிறுவர்களின் மூளையிலுள்ள நரம்பு மண்டலத் தொகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பே இதற்கு காரணமாகும். இதேவேளை, இது காலப்போக்கில் பாரிய நரம்பு மண்டலப் பிரச்சினையை உருவாகலாமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 110 | 100 | 300 | 150 |
| தக்காளி | 60 | 60 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 50 | 60 | 80 |
| கரட் | 100 | 70 | 140 | 140 |
| பூசணி | 40 | 30 | 60 | 50 |
| புடோல் | 40 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 50 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 120 | 110 |
| பாகற்காய் | 80 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 110 | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 | 130 |
| பீற்றூட் | -- | 90 | 160 | 120 |
| கறிமிளகாய் | -- | 20 | 180 | 200 |
| இராசவள்ளி | 120 | 150 | 170 | 180 |
| போஞ்சி | 90 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 130 | -- |
| கீரை - 1 பிடி | 7-8 | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 50-60 | 90 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 50 | 40 | 35-40 |
| முருங்கைக்காய் | 500 | 500 | -- | 600 |
| வெங்காயப்பூ | -- | 240 | 80 | -- |

# இராசி பலன்

03.01.2013

(மார்கழி 19, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 7.39 மணிவரை

பூரம் முற்பகல் 11.34 மணிவரை

இராகுகாலம் 2.01-3.31 மணிவரை

சுபநேரம் 8.01-9.31 மணிவரை

**மேடம்** வியாபார விருத்தியுண்டு, பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** அஞ்சல் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு, கோயில் திருப்பணிகளில் ஈடுபடும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள்.

**கடகம்** உங்களின் மணியான யோசனையை மற்றவர்கள் பாராட்டுவார்கள், புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், உணர்ச்சிவசப்படும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக்குறைவான நாள், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம், காரிய சித்தியுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், கடின உழைப்பால் உயர்வடைவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, வங்கிச் சேமிப்புக்கள் உயர வழிவகை செய்வீர்கள்.

**தனுசு** உதாசினப்படுத்தியவர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சாமர்த்தியமான பேச்சுக்களால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

**மகரம்** கௌரவக் குறைவான நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, சிலருடன் சில விவாதங்கள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு, வாகன சுகமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்** உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, உறவினர் ஆதரவு தர முன்வருவர், கௌரவமான நாள், போசன சுகமுண்டு.

வளவன்

# உயர்கல்வி அமைச்சருடன் பல்கலைக்கழக குழு சந்திப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இன்றைய தினம் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவை சந்திக்கவுள்ளனர். உயர் கல்வி அமைச்சில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் துணை வேந்தர் தலைமையிலான அனைத்து பீடங்களின் பீடாதிபதிகளும் அடங்குகின்றனர்.

தற்போது செயலிழந்துள்ள யாழ். பல்கலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலேயே விவாதிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பல்கலையில் சுடர் ஏற்றிய சம்பவத்தினையடுத்து பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு நான்கு மாணவர்கள் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி செயலிழந்த யாழ்.பல்கலைக்கழகம் தற்போது ஒரு மாத காலத்திற்கும் மேலாகி கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. மாணவர்கள் விடுவிக்கப்பட்டால்தான் பல்கலை செயற்பாடுகளினை மீள ஆரம்பிப்பது சாத்தியமாகும் என விரிவுரையாளர்களும் மாணவர்களும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் உயர்கல்வி அமைச்சருடனான சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)




# யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 604 டெங்கு நோயாளர்கள்

### புள்ளி விபரத்தில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 604 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்த் தடுப்பு பிரிவு புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தத் தகவல்களின் அடிப்படையில் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் அதாவது ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இதில் ஒக்டோபர் மாதத்தில் 108 பேரும் நவம்பர் மாதத்தில்138 பேரும் டிசெம்பர் மாதத்தில் 121 பேரும் டெங்கு நோயாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 21 ஆம் திகதி வரை 101 பேர் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை, கடந்த வருடத்தில் ஜனவரி மாதத்தில் 69 பேரும் பெப்ரவரி மாதத்தில் 34 பேரும் மார்ச் மாதத்தில் 27 பேரும் ஏப்ரல் மாதத்தில் 15 பேரும் மே மாதம் 7 பேரும் ஜுன் மாதம் 3 பேரும் ஜுலை மாதம் 30 பேரும் ஓகஸ்ட் மாதம் 25 பேரும் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் கடந்த இரண்டு நாட்களில்(நேற்று முன்தினமும் நேற்றும்) சராசரியாக இருவர் டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என அந்தத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 190 இற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயாளர்களாக இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் கடந்த வருடம் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் இதற்கு அடுத்தபடியாக சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் அதிக டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் அந்தத் திணைக்கள புள்ளி விபரத் தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## இரு நாட்களில் நான்கு டெங்கு நோயாளர்கள்

### யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை 4 டெங்கு நோயாளர்களுடன் புதுவருடத்தை ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் இருவரும் நேற்றைய தினம் இருவரும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசால்லையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவிலைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் டெங்கு காய்ச்சலினால் இருவர் உயிரிழந்துள்ளதோடு 500 இற்கும் அதிகளவானோர் பாதிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் புதிய ஆண்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த இரு நாட்களில் நான்கு டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-4)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 54,199 சமுர்த்தி பயனாளிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 54 ஆயிரத்து 199 சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் 488 இலட்சத்து 12 ஆயிரத்து 550 ரூபா செலவிடப்படுகிறது என யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏனைய மாகாணங்களை விட அதிக சமுர்த்திப் பயனாளிகளைக் கொண்ட மாகாணமாக வடக்கு மாகாணம் உள்ளது.

சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதும் எண்ணிக்கையினைக் குறைக்க முடியாதுள்ளது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் மட்டும் தற்போது 54 ஆயிரத்து 199 பேர் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளாகவுள்ளனர்.

யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து காணப்பட்டது.

இருப்பினும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று ஆண்டுகளைக் கடந்துள்ள போதிலும் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை குறையவில்லை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது.

அத்தோடு மருதங்கேணி, தெல்லிப்பழை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய விண்ணப்பங்களும் வந்துள்ளன.

இருப்பினும் புதிதாக பயனாளிகள் எவரையும் இணைக்க வேண்டாம் என சமுர்த்தி அதிகார சபையின் உயரதிகாரிகள் பணித்துள்ளனர். மேலும் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கையினை யாழ்.மாவட்டத்திலிருந்து குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு நிரந்தரமாக அவர்களின் வறுமையை ஒழிப்பதற்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# வன்முறை சம்பவங்களால் காயமடைவோர் அதிகரிப்பு

### யாழ்.போதனா பதில் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

மதுபோதை காரணமாக வாள் வெட்டுகளுக்கும் விபத்துகளுக்கும் உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரால் வைத்தியர்களும் தாதியர்களும் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அதிக நேரங்களில் கூடுதலாக இரவு வேளையில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களில் காயமடைந்தோர் வைத்தியசாலையை நாடுகின்றனர்.

இவ்வாறு நாடுவோரில் பெரும்பாலானவர்கள் மதுபோதையிலேயே வருகின்றனர். காயமடைந்தவரோடு உடன் வருகின்றவர்களினாலேயே பிரச்சினை ஏற்படுகின்றது.

அதாவது ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது அவருடைய நண்பர்களும் வைத்தியசாலைக்குள் வந்துவிடுகின்றனர்.

அவர்கள் சிகிச்சையளிக்கும் இடங்களுக்குள் வந்ததும் உடனடியாக சிகிச்சையினை அளிக்குமாறு கோரி வைத்தியர்களிடமும் தாதியர்களிடமும் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு உடன் வருபவர்களை வைத்தியசாலை பாதுகாப்பு பணியாளர்கள் உள் வர முடியாது என தடுத்தால் பாதுகாப்பு பணியாளர்களோடு முரண்படுகின்றனர்.

சிலவேளை அவர்களினைத் தாக்கிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதனைத் தடுப்பதற்கு நாம் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுள்ளோம். இப் பொலிஸ் பாதுகாப்பு வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவின் அருகில் ஈடுபடுத்தப்படும் என பதில் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் தற்போது வன்மறைச் சம்பவங்களினால் காயமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாகவும் இவை மது போதைகளினாலேயே இடம் பெறுவதாகவும் யாழ்.போதனாவின் விபத்துப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். (அ-4)

# ஒளிவிழாவும் அன்பளிப்பும்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் நடத்தப்படும் ஒளிவிழாவும் மாணவர்களுக்கான அறக்கொடை அன்பளிப்பு வழங்கும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நலன்புரிச்சங்க மண்டபத்தில் நலன்புரிச் சங்க தலைவர் இ.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் ஆசியுரையினை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் அடிகளார் மற்றும் கொக்குவில் ஜெபத்தல போதகர் எஸ்.எம்.ஸ்ரீபன், மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை போதகர் ஏ.கே.சுரேந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் க.சகாதேவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டது

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் என கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள் ளார்.

மேற்குறித்த அதிபர்களுக்கான கூட் டம் இன்றைய தினம் நடைபெறவிருந்த திகதி

# இந்த அரசாங்கம் திருந்துவதற்கு இவ்வாண்டே இறுதிச் சந்தர்ப்பம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் இன்று இருப்பது ஒரு புதுமையான அரசாங்கம் என்பதை சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தமிழ் பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்து அவர்களை புனர்வாழ்வு முகாம்களில் அடைக்கின்றார்கள். இது பற்றி கேட்டால் இந்த மாணவர்கள்தான் தாமாகவே இந்த புனர்வாழ்வை விரும்பி கேட்டார்கள் என்று சொல்கிறார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

அதிகாரத்தை பிரித்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் நேற்றைய தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

தமிழ் மக்கள் தொடர்ந்து கோரி வரும் அரசியல் தீர்வை அரசு தர மறுக்கின்றது. ஒரே நாட்டுக்குள் அதிகாரத்தை பகிர்ந்து கொண்டுவாழ்வோம் என நாம் கேட்பதை தர மறுக்கின்றது. இன்றைய அரசியல் சட்டத்தில் இருக்கின்ற 13 ஆம் திருத்தத்தையும் மாகாண சபையையும் கூட வடக்குக்கு தர மறுக்கிறது. தமிழர்கள் தமிழ் மொழியில் தங்கள் கருமங்களை ஆற்றிக் கொள்ளும் உரிமையை தர மறுக்கின்றது.

கேட்பதை கொடுக்காமல் கேட்காததை கொடுக்கும் இந்த அரசு ஒரு புதுமையான அரசாங்கம். தம்மை திருத்திக் கொள்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு இந்த வருடம்தான் கடைசி சந்தர்ப்பம் ஆகும் என அவர் தெரிவித்தார்.

நமது இந்த மேடை தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக பேசப்பட நாம் உருவாக்கியுள்ள மேடை ஆகும். நாட்டின் ஏனைய பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு இந்நாட்டில் எத்தனையோ கட்சிகளின் மேடைகள் உள்ளன. பலதும் இங்கே பேசினாலும் அரசியல் அதிகாரத்தை பிரிப்போம். நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற செய்தியை சிங்கள மக்களுக்கு சொல்வதற்கே பிரதானமாக நாம் இந்த மேடையை பயன்படுத்துகின்றோம்.

தென்னிலங்கையில் இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்த அரசாங்கத்தின் மஹிந்த சிந்தனையை அனுசரிக்க வேண்டும். வேறு அரசியல் சிந்தனைகளை கருத்தில் கொள்ளக்கூடாது. பல்கலைக்கழக மாணவர்கள் தமது மூளைகளை பூட்டி வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த தலைமைத்துவ பயிற்சி நடத்தப்படுகிறது.

தமிழர்கள் இந்த நாட்டிலே அதிகாரத்தை கோரக்கூடாது. இந்த நாடு சிங்கள இனத்துக்கு மாத்திரம் சொந்தமான நாடு என்ற சிந்தனையை தமிழ் இளைஞர்கள் தலையில் புகுத்துவதற்காக இந்த புனர்வாழ்வு பயிற்சி நடத்தப்படுகிறது.

யாழ். மாணவர்கள் தாமாக விரும்பி புனர்வாழ்வை கேட்டார்கள் என இவர்கள் சொல்கிறார்கள். ஆகவே அவர்கள் கேட்டதை இவர்கள் கொடுத்தார்களாம். ஆகா கேட்டதை எல்லாம் கொடுக்கும் எவ்வளவு நல்ல ஒரு அப்பாவி 'அரசாங்கத்தை ஆண்டவன் நமக்கு தந்துள்ளான் என்பதை பாருங்கள்.

நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாகாண சபையை முதலில் வழங்குங்கள் என்றும் நாட்டின் அரசியல் சட்டத்தில் இன்று உள்ள 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யுங்கள் என்றும் நாம் கேட்பது இவர்கள் காதில் விழவில்லை.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிந்தவுடன் இன்று பொருளாதார யுத்தம் நடத்தப்படுவதாக அரசு சொல்கிறது. வடக்கில் இதன்மூலம் பொருளாதார அபிவிருத்தி நடைபெறுவதாக சொல்கிறது. யுத்தத்தால் உடைந்து நாசமாகியுள்ள பாதைகளையும் கட்டடங்கள் சிலவற்றையும் நிர்மாணிப்பது எப்படி பொருளாதார அபிவிருத்தியாகும்? உடைந்தவைகளை செய்வது அபிவிருத்தி அல்ல. அது திருத்த வேலையாகும். இதுவும் இன்று ஒழுங்காக நடைபெறவில்லை என்றார். (அ)

# வெள்ளநீர் வடிந்து வருகிறது; மக்கள் வீடு திரும்புகின்றனர்

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்தவர்களில் பெரும் பகுதியினர் தங்களது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு, வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறி 10 ஆயிரத்து 795 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 681 பேர் 240 தற்காலிக நலன்புரி நிலையங்களில் கடந்த 31 ஆம் திகதி காலைவரை தங்கி இருந்தனர். ஆனால், நேற்று முன்தினம் மாலையாகும் போது 4 ஆயிரத்து 153 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 616 பேர் 93 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்தனர்.

இதன்படி 24 ஆயிரத்து 65 பேர் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இதன் காரணத்தினால் 147 தற்காலிக நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

வெள்ளநீர் தொடர்ந்தும் வடிந்து வருவதுடன் இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருந்தவர்களும் சொந்த வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

### கிளிநொச்சியிலிருந்து

# வடமராட்சி கிழக்கிற்கு போ.வ.சேவை வேண்டும்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கிற்கு கிளிநொச்சியிலிருந்து பயணிகள் பேருந்து சேவை ஒன்றை ஏற்படுத்தி தரவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தகாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பிரிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கின் கிராம மக்கள் தமது அன்றாடத்தேவைகள், வங்கி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அரச கருமங்களையும் வைத்தியசாலைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் கிளிநொச்சி வைத்தியசாலையையே பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் பெரிதும் சிரமப்பட்டு இரண்டு, மூன்று பேருந்துகளைப் பயன்படுத்தியே கிளிநொச்சி பகுதியை அடைய வேண்டியுள்ளது.

சுண்டிக்குளம் தொடக்கம் மருதங்கேணி வரைக்குமான மக்கள் யாழ்ப்பாணம் அல்லது வேறு இடங்களுக்கு தமது தேவைகளை நிறைவு செய்ய மூன்று மணிநேரம் பயணிக்க வேண்டியுள்ளது. ஆயினும் கிளிநொச்சிக்கு ஒன்றரை மணி நேரத்திற்குள் சென்றுவிடலாம்.

எனவே இந்த மக்களின் போக்குவரத்து பிரச்சினையைக் கருத்தில் கொண்டு விரைவாக கிளிநொச்சியில் இருந்து பேருந்து சேவையை நடத்த அரச மற்றும் தனியார் பேருந்து சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-64)

# வாகனம் பள்ளத்தில் வீழ்ந்ததில் விபத்து

## ஐவர் காயம்

(வட்டவளை)

வட்டவளை கரோலினா தோட்டத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் காயமடைந்த 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து சிவனொளிபாத மலைக்குச் செல்வதற்காக நேற்று முன்தினம் இரவு சிறிய லொறி ஒன்றில் பயணித்த ஐந்து ஆண்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த லொறி கரோலினா தோட்டத்துக்கு அருகில் பிரதான பாதையை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் குடை சாய்ந்ததனாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதன் பின்பு படுகாயமடைந்த இரண்டுபேர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>உயரம்:5'7"<br>கி.பா: 16.5, 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: வாகனசாரதி (அரச)<br>தொ. இல: B -892 | பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்: 5'3"<br>கி.பா: 35, 2இல் செவ்.<br>தொழில்/ தகைமை: B.A, M.A . சமுர்த்தி வங்கி தலைமை முகாமையாளர்)<br>தொ. இல: G -912 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 17<br>தொழில்/ தகைமை: படப்பிடிப்பாளர்<br>தொ. இல: B -894 | பிறப்பு: 1974 RC<br>உயரம்: 5'2"<br>தொழில்/ தகைமை: A/L<br>முகாமைத்துவ உதவியாளர்<br>(விவாகரத்து பெற்றவர்)<br>தொ. இல: G -913 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 43<br>தொழில்/ தகைமை: Accounting (Canada PR)<br>தொ. இல: B -900 | பிறப்பு: 1993 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 50, 2 இல் செவ்.<br>தகைமை: A/L<br>தொ. இல: G -916 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'8"<br>கி.பா:32.5<br>தொழில்/ தகைமை: BSc, MSc Computer Programme<br>தொ. இல: B -901 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 72.25, 1 இல் செவ்.<br>தகைமை: A/L<br>சைவபோசனம்<br>தொ. இல: G -921 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# ஷிராணி பதவிவிலகுவதற்காகவே ஒருமாதகால அவகாசம் வழங்கப்பட்டது

## இப்படி கூறுகிறார் அமைச்சர் டிலான்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் பாராளுமன்றத்துக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கிய இறைமையை மீறும் செயலாக அது அமைந்துவிடும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிரான பாராளுமன்றத் தெரிவுக் குழுவால் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன் பின்னரும் அவர் குற்றமிழைக்கவில்லையென சில தரப்பினர் கூறி வருகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள் தெரிவுக்குழுவின் அறிக்கை மற்றும் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து அவர் எவ்வாறு நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டட்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பதில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு போதிய அவகாசம் வழங்கப்படவில்லை. தெரிவுக்குழு விசாரணைகளின் போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அகெளரவமாக நடத்தப்பட்டார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் யாவும் பொய்யானவை.

முன்னாள் நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது அவர் நடத்தப்பட்ட விதத்தை விட கெளரவமான முறையிலேயே தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நடத்தப்பட்டார். அரசியலமைப்பின் சட்டத்துக்கு அமைய பிரதம நீதியரசர் ஒருவருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் ஒருமாத இடைவெளியின் பின்னரே அது பற்றிய பாராளுமன்ற விவாதம் நடைபெறும்.

குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பிரதம நீதியரசர் கெளரவமான முறையில் தானாகவே பதவியிலிருந்து விலகிக் கொள்ளவதற்காகவே இந்த ஒருமாத காலம் வழங்கப்படுகிறது. ஆனால், தற்போதைய பிரதம நீதியரசர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பின்னரும் தனது பதவியில் தொடர்ந்து வருவதுடன் வழக்கு விசாரணைகளிலும் கலந்து கொள்கிறார். பதவியிலிருந்து விலகாமல் நெருக்கடி நிலையொன்றை உருவாக்குவதற்கே அவர் முயற்சிக்கின்றார் என்றார். (அ-2)

## கைவிடப்பட்ட நிலையில் மூன்று சிறுமிகள் மீட்பு

(கொழும்பு)

பண்டாரகம நகரில் இடைநடுவே கைவிடப்பட்டிருந்த மூன்று சிறுமிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த சிறுமிகள் மூவரும் பண்டாரகம பஸ் நிலையத்திலிருந்து நேற்று முன்தினமிரவு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு மீட்கப்பட்ட சிறுமிகள் நான்கு, எட்டு மற்றும் பத்து வயதானவர்கள் என அவர்கள் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சிறுமிகள் தற்போது பண்டாரகம பொலிஸாரின் பொறுப்பில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## யாழ். மாவட்டத்தில் 4 95 292 வாக்காளர்கள் உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் மூலம் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 292 பேர் வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் கடந்த வருடத்தினை விட இந்த வருடம் 12 ஆயிரத்து 948 வாக்காளர் அதிகரித்துள்ளணர் எனவும் யாழ். தேர்தல் திணைக்கள பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி வ.சாந்தமலர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் கடந்த வருடம் (2012 ஆம் ஆண்டு) மேற்கொள்ளப்பட்ட வருடாந்த வாக்காளர் பதிவு நடவடிக்கையின் மூலம் யாழ்.மாவட்டத்தில் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 292 பேர் வாக்காளராக பதியப்பட்டுள்ளனர். இதேவேளை, கடந்த 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவு நடவடிக்கை மூலம் 4 இலட்சத்து 82 ஆயிரத்து 344 பேர் வாக்காளராக பதியப்பட்டிருந்தனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 948 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர். ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவு நடவடிக்கையின் மூலம் பெறப்பட்ட வாக்காளர்களின் பெயர்ப் பட்டியல் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி தேர்தல் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சமுர்த்தி பயனாளிகள் 170 பேருக்கு நிதியுதவி

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 170 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வரை இலவசமாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

சமுர்த்தி அதிகார சபையினால் திரியபியச என்னும் வீட்டுத்திட்டத்தின் கீழ் 170 பயனாளிகளுக்கு இலவசமாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 11 சமுர்த்திப் பயனாளிகளும் வேலணையைச் சேர்ந்த 11 பயனாளிகளும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 12 பயனாளிகளும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 11 பயனாளிகளும் மருதங்கேணியைச் சேர்ந்த 12 பயனாளிகளும் கோப்பாயைச் சேர்ந்த 11 பயனாளிகளும் கரவெட்டியைச் சேர்ந்த 12 பயனாளிகளும் உடுவிலைச் சேர்ந்த 11 பயனாளிகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 11 பயனாளிகளும் சாவகச்சேரியைச் சேர்ந்த 12 பயனாளிகளும் நெடுந்தீவைச் சேர்ந்த 13 பயனாளிகளும் பருத்தித்துறையைச் சேர்ந்த 11 பயனாளிகளும் சங்கானையைச் சேர்ந்த 9 பயனாளிகளும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 12 பயனாளிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## குர்ஆன் மனனப் போட்டியில் இலங்கை மாணவன் முதலிடம்

(கொழும்பு)



சவுதி அரேபியாவில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டியில் இலங்கை மாணவன் ஒருவன் முதலாம் இடத்தைப் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு பெரிய பள்ளிவாசலிலுள்ள மதீனத்துல் இல்ம் அரபுக் கல்லூரியின் மாணவரான ஹாபிஸ் முஹமட் றிஸ்கான் என்பவரே மேற்படி போட்டியில் பங்கேற்று முதலாம் இடத்தை பெற்றவராவார்.

இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜமாஷினாலேயே கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதுவராலயத்தில் வைத்து நேற்றையதினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே நினைவுச் சின்னம் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார். (அ-2)

## சுன்னாகம் ப.நோ.கூ.சங்க போராட்டம் தொடர்கிறது

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் இன்று நான்காவது நாளாகவும் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இவர்களின் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தினைத் தொடர்ந்து சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையும் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமும் நேற்றைய தினம் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளதாக சுன்னாகம் ப.நோ.கூ.ச. தலைவர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பயனற்றவையென சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. தமது கோரிக்கைகளுக்கு சரியான தீர்வு கிடைக்கும் பட்சத்தில் தாம் வேலை நிறுத்தத்தை கைவிடுவதாகவும் அறிவித்துள்ளது. (அ-9)

## குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

(குருமன்காடு)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் உள்ள கரையான் குளத்தில் குளிக்கச் சென்ற மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் குளத்தில் மூழ்கி மரணமடைந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரபாகரன் சஜீபன் (வயது 16) எனும் மாணவன் தனது நண்பர்களுடன் கரையான் குளத்தில் குளிக்கச் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இம் மாணவன் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் தொடர்பான மரண விசாரணைகள் வவுனியா மாவட்ட பதில் நீதிபதி அன்ரன் புனிதநாயகம் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டதுடன் விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் தீக்காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மகாரம்பைக் குளத்தைச் சேர்ந்த றஞ்சன் (வயது 25) என்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாகவும் பதில் நீதிபதி தெரிவித்தார். (அ-9-250)

## கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கனகபுரம் வீதி, ஏ-9 வீதி, பரந்தன்-முல்லை. வீதி ஆகியவற்றில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்குறித்த வீதியால் பயணிக்கும்போது கட்டாக்காலி நாய்கள் குறுக்காகப் பாய்வதால் நாள்தோறும் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு கட்டாக்காலிகளால் விபத்துக்கள் ஏற்படுகின்றதென வைத்தியத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் வீதிப்போக்குவரத்து பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தெரிந்தும் இதுவரை எவ்வித செயற்பாடுகளும் அவர்களால் முன்னெடுக்கப்படவில்லை.

முன்னர் வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு ஏனைய நாய்களைப் பிடிக்கின்ற செயற்பாடுகள் இடம்பெற்றன. தற்போது அச்செயற்பாடு அருகிப் போய் விட்டது. எனவே, இதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு சவாலாகும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

போசாக்கு மறுக்கப்பட்ட பிள்ளையின் குணாதிசயங்கள்

❖ மெலிந்த உடல்
❖ குழிவிழுந்த கண்கள்
❖ துர்மணம்
❖ கன்னங்கள் ஒட்டியிருத்தல்
❖ தாடை நீண்டிருத்தல்
❖ ஒப்பிட்டு ரீதியில் தலை பெரியதாக இருத்தல்
❖ எலும்பும் தோலுமான தோற்றம்

### 3. பாலியல் துஷ்பிரயோம்

சிறுவர்களுடனான தகாத உடலுறவே பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும்.

பொதுவாக பிள்ளைகளுக்கு மிக நெருக்கமாகத் தெரிந்த ஒருவரினாலேயே பெரும்பாலும் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. அபூர்வமாகவே அந்நியர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பாலியல் துஷ்பிரயோகத்தின் நீண்டகால விளைவுகள்

❖ மன அழுத்தம், மனவிரக்தி ஏற்படல்
❖ சுய பரிதாபம் காணப்படல்
❖ பாலியல் ரீதியான தொடர்புகளில் பிரச்சினை ஏற்படல்
❖ விபச்சாரம்
❖ தன்னினச் சேர்க்கை
❖ சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடல்
❖ உறவினர்கள், பெற்றோர்கள், திருமணம் முடிக்க இருப்பவர்களுடன் பிரச்சினைப்படல்
❖ சமூகத்தில் இருந்து தூரவிலகி நிற்றல்
❖ கற்பழிப்புக்களில் ஈடுபடல்

04. திட்டமிட்டு போதையேற்றுதலும் நஞ்சூட்டுதலும்

மதுபானம் அல்லது சிலவகையான போதைமருந்துகளை கொடுத்து பிள்ளைகளுக்கு போதை உண்டாக்குவதனை அது குறிக்கும். இதனால் ஏற்படும் விளைவு

❖ போதைக்கு அடிமையாதல்
❖ களவுகளில் ஈடுபடுதல்
❖ சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுதல்
❖ உயிராபத்து ஏற்படல்

05. பிள்ளைகளைப் பற்றி பொய் கூறுதல்.

இதன்படி பெற்றோர் இம்சை காரணமாக ஏற்பட்ட ஒரு தாக்கத்தை வைத்தியரிடம் கூறும் போது அதனை மறைத்து வேறு நோய் என வைத்தியரை நம்ப வைக்க முற்படுவதைக் குறிக்கும். இதன் காரணமாக தேவையற்ற சோதனைகளுக்கும் சிகிச்சைகளுக்கும் உட்படுவதைக் காணலாம்.

06. மருத்துவக் கவனத்தில் உதாசீனம்

மருத்துவக் கவனத்தில் உதாசீனம் என்பது சிறுவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அதற்கான முக்கியத்துவத்தினை வழங்காது நோய் தீவிரமான பின்பு வைத்தியரை

## அந்த இளம் குருத்துக்களை எப்படி பாதுகாப்பது?

நாடும் நிலையினைக் குறிக்கும். அத்துடன் சிறுவர்களுக்குத் தடுப்பு மருந்துகள் உரிய நேரத்தில் பாதுகாப்பு வழங்குபவர்களினால் வழங்கப்படாமையையும் குறிக்கும்.

07. உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்

உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களினை அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது விடும் நிலைகளினையும் உளரீதியில் அவர்களினை அச்சுறுத்தும் செயற்பாடுகளினையும் குறிக்கும். இதனுள் பின்வருவன உள்ளடங்கும்.

1. பிள்ளைகளினை எப்போதும் புறக்கணித்தல்
2. உற்சாகத்தினை மறுதலித்தல் (பிள்ளைகளினை தனிமைப்படுத்தல், இருட்டறையில் பூட்டி வைத்தல்)
3. பிள்ளைகளினை எப்போதும் குறை கூறுதல்
4. பிள்ளைகளினை பயமுறுத்தல்
5. பிள்ளைகளினை கடுமையாக தண்டித்தல்
6. உடலுக்கு ஆபத்தினை உண்டாக்குவதாக பயமுறுத்தல்
7. பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளில் ஒத்துழையாமை, பங்கு கொள்ளாமை
8. பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளினை நிறைவேற்றாமை

08 சிறுவர் ஊழியரும், போர்களில் சிறுவர்களை ஈடுபடுத்தலும்

14 வயதிற்குட்பட்டவர்களினை வேலைக்கமர்த்துவதினை குறிப்பிடும் குற்ற நடவடிக்கை காரணமாக சிறுவர்களின் அடிப்படை உரிமை மீறப்படுவதனால் அது சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படும்.

இதேபோல சிறுவர்களினை போரில் ஈடுபடுத்துவதும் துஷ்பிரயோகமாகவே கருதப்படுகின்றது.

எனவே, உடல், உள ரீதியாக ஏற்படுத்தப்படும் சிறுவர் துஷ்பிரயோகமானது பின்வரும் விளைவுகளினை உருவாக்க வல்லது.

1. பயமும், மனவிரக்தியும்.
2. சஞ்சலத்தினாலும் மன அழுத்தத்தினாலும் உடலில் ஏற்படும் அறிகுறிகள்.
3. சிறுவர்கள் தாமே தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளல்.
4. அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடாமை (பாடசாலைக்கு போகமறுத்தல்)
5. தனதுஎதிர்காலசிந்தனையினைகைவிடல்.
6. பிடிவாதம், அடங்காமை போன்ற குணங்கள் உருவாதல்.
7. மற்றவர்களிடம் காரணமின்றி கோபம், எரிச்சல் ஏற்படல்.
8. நிரந்தர உடல், உள, ஊனம் ஏற்படல்.
9. பாதிக்கப்பட்டவர்களினால் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்தல்.
10. சமூக சீரழிவுகள் (விபச்சாரம், போதைப் பொருள்) தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்பாக அமைதல் (பெருக்கல் முறையில்)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் (பாலியல்) அதிகம் பயன்படுத்துவது ஆண் சிறுவர்களே. ஆகும். இதற்கு காரணம்.

1. பெண்கள் கருத்தரித்து விடக்கூடும் என்பதாலும்
2. ஆண்கள் எவ்வகையிலும் பாதிக்க மாட்டார்கள் என்பதாலும் பெண்களினை பெற்றோர் கூடிய கட்டுப்பாட்டுடன் வளர்க்கின்றனர். சிறுவர் உரிமைகள் மீறப்படும்போது அதனைச் சிறுவர் துஷ்பிரயோகம் என்பர். இவ்வகையில்

❖ உயிர்வாழும் உரிமை.
❖ பெயரும் தேசியமும் அவர்களின் பராமரிப்பைப் பெறவுமான உரிமை.
❖ பெற்றோரை அறியவும் அவர்களின் பராமரிப்பைப் பெறுவதற்கான உரிமை.
❖ விருப்பத்திற்கு மாறாக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படாமை.
❖ சிந்தனை, மனச்சாட்சி, சமயம் ஆகிய சுதந்திரம்.
❖ கூடும் சுதந்திரம்.
❖ அந்தரங்கத்திற்கான உரிமை.
❖ கல்வி பெறும் உரிமை.
❖ ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவ்டிக்கைகளுக்குமான உரிமை.
❖ பொருளாதார ஏமாற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
❖ கடின உழைப்பிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
❖ சித்திரவதை, குரூர, மிருகத்தனமான அல்லது இழிவுபடுத்தும் விதமாக நடத்துவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
❖ நியாயமான விசாரணை பெறும் உரிமை.
❖ சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கான உரிமை போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தின் தாக்கம்

திருமதி வினோதினி கலைச்செல்வன்
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்.
யாழ்ப்பாணம்.

சிறுவர் துஷ்பிரயோகத்தினால் சமூகத்தில் பின்வரும் விளைவுகள் ஏற்பட இடமுண்டு.

1. சமூக நிறுவனமான குடும்பம் என்கின்ற அலகு இதனால் சிதைந்து போக வாய்ப்புண்டு.
2. உறவினர்களிடம் நம்பிக்கையீனம் ஏற்படுகின்றது.
3. விவாகரத்துக்கள் உயர்வடைய வாய்ப்பு உண்டு.
4. விபச்சாரத்திற்கு வாய்ப்பு அதிகரிக்கின்றது.
5. தொடர்ந்து துஷ்பிரயோகங்கள் உயர்வடையும். (முற்றும்)

# பாப்பரசரை சந்திக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

இத்தாலிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றையதினம் பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட்டை சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

வத்திக்கான் தேவாலயத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கையில் தற்போது இடம்பெறும் செயற்பாடுகள் அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் அவர் பாப்பரசருக்கு இதன்போது விளக்கமளித்துள்ளார்.

தொடர்ந்து பாப்பரசரால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ள விசேட திருப்பலி பூஜையிலும் எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்டதாகவும் அவரது காரியாலய பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுகளில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பாரியார் மைத்திரி விக்ரமசிங்கவும் இத்தாலிக்கான இலங்கை தூதுவர் அசித்த பெரேரா உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர். (அ-2)

# தேசிய எல்லை நிர்ணய அறிக்கை ஜனாதிபதியிடம்

தேசிய எல்லை நிர்ணயக்குழு தனது அறிக்கையை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமைக்கு அமைய உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்காக புதிய வட்டாரங்களை உருவாக்குவதற்கான சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையையே இந்தக்குழு சமர்ப்பிக்கவிருக்கின்றது.

புதிய முறைமையின் பிரகாரம் 70 சதவீத மானவர்கள் தொகுதிவாரியாகவும் 30 வீதமானவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வரை கொடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மருதடிப்பாலம் கடும் சேதம்; பயணிப்பதில் மக்கள் சிரமம்



(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவநகர்க் கிராம அலுவலர் பிரிவில் சேதமுற்றிருந்த மருதமரத்தடி பாலம் அண்மையில் பெய்த கடும் மழையினால் கடுமையாக சேதமடைந்துள்ளது. இதனால் அப்பாலத்தினூடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் சிவநகர்க் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 325 குடும்பங்களின் அடம்பன் சோலை நெற்செய்கை வயல்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகவும் இம்மருதடிப்பாலம் காணப்படுகின்றது. அத்துடன் அப்பகுதிக்கான உருத்திரபுரம்குள வான் கட்டுப்பகுதியும் திருத்தம் செய்யப்படாமல் உள்ளது.

இதனால் இவ்விரு வீதிகளையும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் கந்தன் குளம், அம்பாள்குளம், புதுக்குளம், புதுமுறிப்புக்குளம் ஆகியவற்றின் கழிவுநீர் அனைத்தும் ஒன்று சேர்ந்து வந்து இந்த மருதமரத்தடி பாலத்தின் ஊடாகவே செல்கின்றமையால் பல விவசாயக் குடும்பங்களுக்கு பெரிதும் உதவுகின்ற இந்த பாலத்தை நல்ல முறையில் திருத்தம் செய்து தருமாறு சிவன் சோலை கிராமமக்களும் சிவநகர் விவசாயிகளும் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

# மேன்முறையீட்டு நீதிமன்ற அழைப்புக்கு இசையப் போவதில்லை- ஐ.தே.க.

## மௌனம் சாதிக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு

(கொழும்பு)

**பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தை இழிவுபடுத்தப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.**

அழைப்பாணையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. மூன்று காரணங்களின் அடிப்படையில் நீதிமன்றில் ஆஜராகப் போவதில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளமை, எதிர்க்கட்சியினரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்படாமை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கையிலிருந்து ஏற்கனவே விலகியமை, ஆகிய காரணிகளினால் நீதிமன்ற விசாரணைகளில் பங்கேற்கப் போவதில்லை.

ஏற்கனவே முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க அளித்த தீர்ப்பு ஒன்றை மதிக்கும் வகையிலும் நாடாளுமன்றத்தை இழிவுபடுத்தக்கூடாது என்ற காரணத்தினாலும் விசாரணைகளில் பங்கேற்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு அமைய நீதிமன்ற விசாரணைகளில் பங்கேற்கப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. அரசாங்கத்தினால் நீதிமன்றங்களுக்கு ஏற்படுத்தியுள்ள நிலைமை திருப்தி அடையக்கூடிய வகையில் அமையவில்லை என கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அழைப்பாணை இதுவரையில் கிடைக்கவில்லை எனவும் அழைப்பாணை கிடைத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுவதா இல்லையா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த எந்தவொரு உறுப்பினரும் இன்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதனால் நீதிமன்றில் ஆஜராக வேண்டிய சட்டத் தேவை கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மனுவில் குறிப்பிடப்பட்ட சகல 13 பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் நாயகம் சனத் பின்னதூவ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான அரசியல் குற்றப் பிரேரணை குறித்து ஐக்கிய நாடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்கு தமது பதிலை அனுப்புவதற்கு இலங்கை அரசு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளியுறவுத்துறை அமைச்சின் சார்பாக பேசவல்ல சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இது குறித்து ஊடகங்களுக்கு விபரிக்கையில்,

எதிர்வரும் சில தினங்களில் தமது விளக்கத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பவுள்ளதாக கூறினார். ஐக்கிய நாடுகளின் சுயாதீன நீதியரசர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் விசேட பேச்சாளர் கேப்ரியல் க்னவுலின் அண்மையில் பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

குற்றப்பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அவதானத்துடன் செயற்படுவதாக அவர் வலியுறுத்தி கூறியிருந்தார். எனவே, குற்றப்பிரேரணையை மீள ஆராயுமாறு தாம் கோருவதாக விசேட பேச்சாளர் கேப்ரியல் க்னவுலின் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தெரிவுக்குழு அறிக்கை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பில் முழுமையான விடயங்களை ஆராயாமல் ஐக்கிய நாடுகள் விசேட பேச்சாளர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார். (அ-2)

# 30 வருட யுத்தத்திற்கு பின்னரும் முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள்

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்தபோது முஸ்லிம்கள் அன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்கினர். அது போன்ற 30 வருட யுத்தம் நிறைவடைந்த பின்னரான இன்றும் முஸ்லிம்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என நீதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் மகளிர் கல்வி சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மறைந்த கலாநிதி டி.பி.ஜாயாவின் 123 ஆவது நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு பேருரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கடந்த 1915 ஆம் ஆண்டு வர்த்தகத்தை மையமாகக் கொண்டு கம்பளையில் சிங்கள முஸ்லிம் கலகம் தூண்டப்பட்டது. அதே போன்று இன்றும் வர்த்தகத்தை மையமாக கொண்டே கலகத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர்.

இந்த தீய நோக்கம் ஹலால் சான்றிதழ் மற்றும் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை போன்ற பல கோணங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை சர்ச்சை மற்றும் ஹலால் சான்றிதழ் பிரச்சினைகள் வர்த்தகத்தின் பின்னணியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் என்ற வகையில் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளேன். இந்த உரைக்கு தேவையான சகல தரவுகளையும் தற்போது சேகரித்துக் கொண்டிருக்கிறேன். அதற்காக பயமில்லாமல் இந்த சர்ச்சைகளின் அடிப்படைகளை தெளிவுபடுத்த வேண்டும். இதனை ஒருபோதும் தனியாக மேற்கொள்ளக்கூடாது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து இதற்கு எதிராக போராடுவதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளோம்.

பெரும்பான்மை சமூகத்தில் சிறுபான்மையினருக்கு ஆதரவாக செயற்படுகின்றவர்கள் உள்ளனர். இவர்களுடன் நாம் இணைந்து இவ்வாறான பிரச்சினைகளுக்கு எதிராக போராட வேண்டும். பெரும்பான்மை சமூகத்திலுள்ள சிறிய ஒரு குழுவினரே இன்று இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றனர். இவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் இனவாத முலாம் பூசுகின்றனர் என்றார். (அ-2)

# வங்கியில் கடன் கோருவோருக்கு அரசியல் பின்புலம் உண்டு

## பதவி விலகுகிறார் இலங்கை வங்கி தலைவர்

(கொழும்பு)

இலங்கையின் அரச வங்கிகளில் இருந்து அதிகளவானோர் கடன்களை எதிர்பார்ப்பதாகவும் கடன் கோரி விண்ணப்பிப்பவர்கள் அரசியல் பின்புலம் உள்ளவர்களாக காணப்படுகின்றனர் எனவும் பதவி விலகும் இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரச வங்கிகளில் அதிகளவானோர் கடன்களை எதிர்பார்க்கின்றனர். இது வங்கித் துறையில் பாரிய சவாலாக விளங்குகிறது என்று விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடன்களை கோரும் ஒவ்வொரு விண்ணப்பங்களுக்கு பின்னால் அரசியல் இருப்பதாக காண முடிவதாகவும் இது கடனை மீளப்பெறும் போது பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது பதவி விலகலுக்கு காரணம் ஜனாதிபதியின் மகன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவா? என்று அவரிடம் கேட்ட போது அது பதவி விலகலுக்கு காரணம் அல்ல என்று தெரிவித்தார்.

தாம் கடந்த ஓகஸ்ட்டில் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் வழங்கிய போதும் இன்னும் புதிய ஒருவர் இலங்கை வங்கி தலைவர் பதவிக்கு நியமிக்கப்படவில்லை. எனினும் அந்தப் பதவிக்கு அரசியல் பின்புலம் உள்ளவர் ஒருவரை நியமிக்க வேண்டாம் என்று தாம் ஜனாதிபதியை கேட்டுக் கொள்வதாக விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (அ-2)

# யூனியன் குளம் ஊடாக பாய்ந்தது வெள்ளம்

## தோன்றியது கிடங்கு: வீதி மோசமாக பாதிப்பு




(கோணாவில்)

கோணாவில் யூனியன் குளம் ஊடாக அக்கராயன் செல்லும் வீதி யூனியன்குளம் சந்திக்கருகில் மிகமோசமாக பாதிப்படைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழை காரணமாக அக்கராயன்குள நீர் மட்டம் சடுதியாக உயர்வடைந்து வான் கதவு அண்மையில் திறந்து விடப்பட்டது.

இந்நிலையில் இந்நீரானது பிரதான வாய்க்கால் வழியே வரும் இடத்தில் யூனியன் குளம் பகுதியில் வீதியின் குறுக்கே பாய்ந்து பெரும் கிடங்கினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இவ் வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. இவ்வீதியானது இடப்பெயர்வின் பின் எந்தவித புனரமைப்பும் செய்யப்படாமல் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அக்கராயன்குள வான் மற்றும் இவ் வீதியினை ஊடறுத்துப் பாயும் நீரினால் 134 விவசாயிகளின் 311 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதுவரை காலமும் இவ் வீதியினை உரியவர்கள் உரிய முறைப்படி திருத்தித்தரவில்லை எனவும் தற்போது ஏற்பட்டுள்ள இந் நிலைமையிலாவது இவ் வீதிக்கு ஒரு வசந்த காலம் வருமா? என யூனியன்குளம் கிராம மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். (அ-9)



# மூன்றாம் உலகப்போர்

## 03 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

..எனது பெருமூச்சுக்கு முன்னால் மனிதப் பூச்சிகள் என்னாகும் என்று இடித்துச் சிரித்தது இயற்கை.

மனிதர்களைத் தூக்கி வீதியில் எறிந்து, வாகனங்களைத் தூக்கி வீட்டுக்குள் எறிந்து அநியாயமாக அழிச்சாட்டியமாடியது ஆழிப்பேரலை.

உயிர் தப்பிய ஒவ்வொரு நபரும் தன்னைத் தவிர சென்டாய் நகரில் இன்னோர் உயிர் இருக்க முடியாது என்று குலைநடுங்க வைத்த கோரத் தாண்டவம் அது.

சென்டாய் நகரத்தின் மீது சுனாமி அலை ஆயிரங்கால்களால் நடந்து, அழிவு செய்து கொண்டிருந்தபோது மியாகி நகரத்தில் இருந்தான் இஷிமுரா; தங்கள் பண்ணையின் அடுத்த நெல் நடவுக்கு இயற்கை உரம் இட்டுக் கொண்டிருந்தான்.



அவன் தாயும் தந்தையும் இயற்கை விவசாயிகள். மண்ணையும் சூரியனையும் கும்பிடுகிறவர்கள். இரசாயனத்தின் வாசனையே விவசாயத்துக்கு ஆகாது என்கிறவர்கள். செயற்கை உரமிடுகிறவன், மண்ணைக் கொஞ்சம் கொஞ்ச மாய்க் கொலை செய்கிறவன் என்ற கொள்கையுடையவர்கள். இயற்கை உணவு உண்கிறவர்களே மண்ணின் மக்கள்; மற்றவர்கள் மருந்தின் மக்கள் என்று நகையாடுகிறவர்கள்.

அவர்கள் பண்ணையில் விளைகிற பொருள்களுக்கு சென்டாயில் விலை அதிகம். இயற்கை உணவுக் கண்காட்சிக்கு இரண்டு நாட்களுக்கு முன் சென்டாய் சென்றவர்கள்; நாளை திரும்புவதாய் இருந்தார்கள். என்ன வானார்களோ? தொலைக்காட்சி கண்டதும் பதறினான் இஷிமுரா. எப்போதும் கொடூரம் குறைத்துச் சொல்லும் ஜப்பானிய அறிவிப்புக் கூட இந்தமுறை அபாயக்குறி காட்டியது.

மியாகி-சென்டாய் 286 கிலோ மீட்டர்தான். இரண்டு மணிநேரத்தில் அவன் சென்டாய் அடைந்தபோது ஜலசமாதியாகிக் கிடந்தது நகரமே.

நகரத்தின் பெரும்பகுதியைத் திட்டுத் திட்டாகத் தின்று தீர்த்திருந்தன தண்ணீரின் கோரப்பற்கள். அடையாளங்கள் தடம்புரண்டு கிடந்தன. எந்தச் சாலையும் முழுநீளம் சென்று முடியவில்லை. தரையில் கிடந்த பெயர்ப் பலகைகள் அந்தந்த வீதிகளுக்குத்தான் சொந்தமானவை என்று நம்ப முடியவில்லை.

இன்னொரு பூகம்பமோ சுனாமியோ வரக்கூடும் என்ற அச்சம் உறைந்து கிடந்தது ஊருக்குள். பிணங்களையும் மரங்களையும் சிதிலங்களையும் அப்புறப்படுத்துவதில் முனைந்திருந்தது உணர்ச்சி காட்டாத மீட்புக்குழு.

தங்கள் உறவுகளை உயிரோடோ பிணமாகவோ கதறிக்கொண்டே கண்டுபிடிக்க முனைந்த கூட்டத்தில் கலந்துபோனான் இஷிமுரா.

கண்காட்சி நடந்த அரங்கம் சென்டாய் துறைமுகத்திலிருந்து தென்மேற்கே 3.5 கிலோமீட்டர் என்று காட்டியது கையிலிருந்த வரைபடம்.

இதில் எது வீதி? எது தென்மேற்கு? உத்தேசமாய்ப் போராடி நகர்ந்து- நடந்து தாவி- ஓடி அவ்விடம் அடைந்தபோது மனிதர்கள் இருந்த எந்தச் சுவடும் அங்கில்லை. தண்ணீர்ப் பயணப்பட்ட தடத்தின் வழியே நெடுந்தூரம் கடந்தபிறகு ஒரு திறந்த மைதானத்தில் ஒதுங்கிக் கிடந்தன நூற்றுக்கணக்கான கார்கள்- உடைந்ததும் கவிழ்ந்ததும் நொறுங்கியதும் சிதைந்ததுமாய்.

# தின்று தீர்த்திருந்தன... தண்ணீரின் கோரப்பற்கள்

பல கார்களுக்கு எண் பலகையே இல்லை. சிவப்பு நிற ஆல்ட்டோ கார் அவன் தந்தையுடையது. பூனைகளின் நாய்களின் உடல்களும் பிணங்களும் பொம்மைகளும் டயர்களும் உடைந்த பாத்திரங்களும் சிதறிக்கிடந்த மைதானத்தில் இதயம் பிழியும் கண்ணீரோடு தந்தையின் காரைத் தேடினான் இஷிமுரா.

"அதோ அதோ சிவப்பு ஆல்ட்டோ"

ஓடி நெருங்கினான். எண் சரி- ஆனால், எங்கள் கார் இல்லை இது. மஞ்சள் பலகையில் கறுப்பு எண்கள் இருந்தால் அது தனியார் வாகனம். கறுப்புப் பலகையில் மஞ்சள் எண்கள் இருந்தால் அது வணிகவாகனம். இது வணிகவாகனம்.

பதறிச் சலித்து மைதானத்தின் மறுமுனை அடைந்தபோது தூரத்து வீட்டின் பல்கனியில் தொங்கிக் கொண்டிருந்தது ஒரு சிவப்பு ஆல்ட்டோ (கார்).

நெருங்கினான்; எண் பார்த்தான்; வண்ணம் பார்த்தான். அது- அதுதான்- அதுவேதான். தாவி ஓடித் தாண்டினான். பூட்டிய கார்க் கதவின் உடைந்த கண்ணாடி வழி எட்டிப் பார்த்தான்.

உள்ளே...

செங்குத்தான பிணமாய் அப்பா. அவர் தோளில் கை வைத்தபடி சிதைந்த கோலத்தில் அம்மாவின் பிணம். "கடவுளே!" ஓங்கிக் கதறினான் இஷிமுரா- நெளிந்த காரில் தலை முட்டினான். துக்கம் கேட்க ஆளின்றி அவன் மட்டும் அழுதான்.

எரியும் மூங்கில் காட்டில் சிறகு கருகும் ஒரு பட்டாம்பூச்சியை எந்தப் பறவை விசாரிக்கும்?

நொறுங்கி விழுந்தான்.

மறுமுறை ஆடி அடங்கியது பூமி. 6.7 என்று பதிவு காட்டியது ரிக்டர்.

•••••••••••••••••••••••

## வாய் வெடிச்ச பொம்பள

அட்டணம்பட்டி அட்டணம்பட்டின்னு ஒரு ஊரு தேனி மாவட்டத்துல. அங்க கருத்தமாயி கருத்தமாயின்னு ஒரு தொத்த விவசாயி. ஆளுன்னா ஆளு அம்சமான ஆளு. ஆறடிக்குக் கொஞ்சம் கம்மி. அறுபது அறுபத்தஞ்சு இருக்கு வயசு. ஆனா அம்பது அம்பத்தஞ்சுக்கு மேல சொல்ல முடியாது.

கறுப்பும் வெள்ளையுமாக் கலந்து கெடந்தாலும் மண்டையில் ஒத்த முடி உதிரல பாத்துக்குங்க. கூனும், வகுறும் போடாத வரைக்கும் மனுசனுக்கு வயசு தெரியாதில்ல.

சும்மா செக்குல ஆட்டுன எண்ணெய் எடுத்துச் சிவலிங்கத்துக்குப் பூசுன மாதிரி, தேக்கங்கட்ட மாதிரி திரேகம் (தேகம்).

படிக்காத ஆளுதான். பழுத்த அனுபவம். கிராமத்து ஆளுகளுக்கு ஆகாயமும் பூமாதேவியும்தான் பள்ளிக்கூடம். மனுசப்பய ஒவ்வொருத்தனும் வாத்தியார்தான் அவுகளுக்கு.

கருத்தமாயி பங்குக்கு வந்தது அப்பன் பாட்டன் வழிவந்த பூமி மட்டுமில்ல. மண்ணைக் கிண்டுற சாதிக்குன்னு உண்டான பரம்பர ஞானமும் பட்டாவோட வந்திருக்கு.

இந்தியாவுக்கு நிதி மந்திரி யாரு? விவசாயம் யாரு கையில இருக்கு? கரண்டு மந்திரி யாரு? எதப்பத்தியும் கவலை இல்ல அவருக்கு. முப்பத்திரண்டு இலட்சத்தி எண்பத்தேழாயிரத்தி எரநூத்தி அறுபத்திமூணு சதுர கிலோ மீட்டர் உள்ள இந்தியாவுல அவருக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒண்ணே முக்கா ஏக்கரும் பொறம்போக்கு ஏழு சென்ட்டும்தான்.

அவரு சொன்னா சொன்னபடி கேக்கும் மண்ணு. உக்கிபோடுன்னு அவரு சொலீட்டா மரம் மட்டையெல்லாம் ஒக்காந்து ஒக்காந்து எந்திரிக்கும்.

எப்ப மழைவரும்-எப்ப வெறிக்கும்-தெரியும் அவருக்கு. எந்த வெள்ளாமைக்கு எந்த சீக்கு வரும்-அதுக்கு என்ன பண்டுதம் அத்துபடி அவருக்கு.

ஒண்ணே முக்கா ஏக்கரிலயும் அடக்கித் தக்காளி நட்டிருந்தாரு. ஆறுமாச வெள்ளாமை தக்காளி. நட்டுத் தொண்ணூறு நாள்ல பழம் எடுக்கலாம். அங்கிட்டு ஒரு தொண்ணூறு நாள் காய்க்கும். நட்டு நாப்பது நாளாச்சு. சும்மா தளதளன்னு கன்னிப்பொண்ணு மாதிரி வந்த தக்காளி திடீர்ன்னு குக்கு நோவு வந்த கோழிமாதிரி சொடிஞ்சு ஒக்காருது.

"யாத்தே! கொண்டக்கருகல் நோய் வந்துருச்சுடா." பதறிப்போனார் கருத்தமாயி.

வேலியோரமா வெள்ளாட்டங்குட்டிக்கு கொளை ஒடிச்சுக் குடுத்துக்கிட்டிருந்தா கருத்தமாயி பொண்டாட்டி சிட்டம்மா. வாய்வெடிச்ச பொம்பள பெறக்கும்போதே பேசிக்கிட்டே பொறந்தவ. வீட்டுக்கு வெலக்கான பொம்பளங்க தக்காளிச் செடிகளுக்குள்ள ஊடமாட திரிஞ்சா அந்த வெக்கையில கொண்டக் கருகல் நோய் வந்திரும்ங்கறது ஐதீகம்.



(தொடரும்)




# கடவுளின் கணக்கு!

சரவணனுக்குப் பணம்தான் குறி.கஷ்டப்படுபவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம்தான் ஓடிவர வேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால் அவன் பணம் கொடுக்க மாட்டான். பண்டபாத்திரமோ நகையோ கொண்டுவந்தால்தான் பணம் கொடுப்பான். அதுவும் பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து எல்லா மக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து அவனுக்கு இலாபத்தை வாரிக்கொடுத்தார்.

இதெல்லாம் ரொம்பப் பாவம். நம் மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள் என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

போடி போடி பிழைக்கத் தெரியாதவளே. பணம்தான் உலகம்... பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்கமாட்டான் என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன்.

ஒருநாள் புதிய ஆள் ஒருவன் சரவணனிடம் வந்தான்.

என் மனைவிக்கு ஒரு பெரிய ஒபரேசன் செய்யவேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது. என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக்கொள்கிறீர்களா என்று கேட்டான்.

அவனைப் பார்த்தால் திருட்டுப் பயல் போல இருக்கிறது. ஒரு மூட்டை நகைகொண்டு வந்திருக்கிறான். நிச்சயமாக எங்காவது திருடிக்கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாம் என்றாள்.

ஆனால் நகையைக் கண்டதும் பேராசையும் பொங்கியது சரவணனுக்கு. இவளோ நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

கமலா நீ இந்த விடயத்தில் தலையிடாதே... உனக்கு என்ன தெரியும்! என்று அவளைத் திட்டி அனுப்பிவிட்டு மூட்டையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான்.

அந்த ஆள் மூட்டையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. மாற்று உறைத்துப் பார்த்தான் சரவணன். எல்லாமே சுத்தத் தங்கம். இலட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

பத்தாயிர ரூபாய் தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு இல்லாவிட்டால் போ, என்று கண்டிப்பாகப் பேசினான்.

சரி ஐயா பணத்தைக் கொடுங்கள் என்று அழுது வடிந்தான் அந்த ஆள். உடனே பணத்தை கொடுத்து நகைகளை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினான் சரவணன்.

மனம் முழுவதும் சந்தோசம். இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும். இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்துக்கு சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான்.

ஒரு மாதம் சென்றது. சரவணன் வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இன்ஸ்பெக்டரும் காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு கீழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்திற்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி. சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான்.



இவர் தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர் என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன். அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரும் காவலர்களும் சரவணனின் வீட்டுக்குள் புகுந்து அலுமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு ஏனைய நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு சரவணனை ஜீப்பில் அள்ளிப் போட்டுக்கொண்டு போனார்கள்.

கடவுள் சரவணனுக்கு உதவி செய்வது போல அவனை செழிக்க வைத்து கடைசியில் பழி வாங்கி விட்டார். ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?

# கண் நிறைந்த அழகு!

ஒரு வியாபாரிக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். ஐவரும் பெண் பிள்ளைகள். வியாபாரியும் நன்கு சம்பாதிப்பவர். ஆகையால் தன் பிள்ளைகளுக்கு எந்தக்குறையும் இல்லாமல் வளர்ந்து வந்தார்.



அவர்கள் விரும்பிக் கேட்பதைத் தட்டாமல் வாங்கிக் கொடுப்பர் பெற்றோர். சகோதரிகளில் இளையவள் மட்டும் சற்று நிறம் மங்கி கறுப்பாக அழகில்லாதவள் போல தோன்றுவாள். ஏனைய மூத்தநான்கு சகோதரிகளும் நல்ல சிவப்புடன் அழகாக இருப்பர்.

இது இவர்களுக்கு மனதில் கர்வத்தை வளர்த்தது. இவர்கள் எப்போதும் தங்களை சிங்காரித்துக் கொண்டு கண்ணாடிமுன் நிற்பதே வழக்கமாகி விட்டது. தப்பித்தவறி தன்னை அழகு படுத்திக்கொள்ள இளையவள் கண்ணாடிமுன் நின்று விட்டால் மூத்த சகோதரிகள் ரசனையில்லாமல் வார்த்தைகளால் விமர்சனம் செய்ய ஆரம்பித்து விடுவர்.

இதனால் இளையவள் தனக்குள் அழுது வேதனைப்படுவாள். இளையவள், மூத்தவர்களைக் காட்டிலும் இரக்க சிந்தனையும் உதவும் மனப்பான்மையும் கொண்டவள். மூத்த பெண்களின் குணம், இளையவளுக்கு நேர் எதிரானது. தங்கள் அழகில் கர்வம் கொண்டு வேறு எவரையும் மதிக்கமாட்டார். எனவே ஏனையவர்களிடமும் அவர்களுக்கு நல்லபெயரே இல்லை.

ஏழைக்கு அன்பு காட்டும் இளையவளை தர்மதேவதை என்று தான் போற்றுவர் மக்கள். இவ்வளவு ஈகைக்குணம், சிறந்த பண்புகள் இருந்தும் புறஅழகு போதவில்லையே... அதனால் தானே சகோதரிகள் தன்னை வெறுக்கின்றனர் என நினைத்து வேதனைப்படுவாள்.

இளையவளின் வேதனையைப்பெற்றோர் நன்கு புரிந்து கொண்டனர்.

ஒருநாள் இளையவளை அவர்கள் அழைத்து நிலா இப்படி உட்கார் என்றனர்.

அவளும் பெற்றோரிடம் ஆசையுடன் அமர்ந்தாள். உன் மூத்த சகோதரிகள் உன்னை மதிக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காகக் கவலைப்படாதே. புற அழகைக் காட்டிலும் உன் மன அழகுதான் மிகவும் அற்புதமானது.

அதுதான் அனைவரையும் கவரும் காந்தம் போன்றது. எக்காலமும் உன் அழகுதான் வளரும். நிரந்தரமாகவும் இருக்கும். இவர்களின் வெளித்தோற்ற அழகு காலப்போக்கில் மாறி விடும். அதை உணர்ந்துகொள் போதும்! என ஆறுதல் கூறினர். மன நிம்மதி அடைந்தாள் நிலா.

# 2013 புத்தாண்டு பலன்கள்

## இடபம்

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**மிதுனத்தில் வரும் குருவால் மிதமிஞ்சிய இலாபம் வரும்! வருமானம் பற்றியும் வருங்கால முன்னேற்றம் குறித்தும் எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருக்கும் இடப இராசி நேயர்களே!**



பிறக்கும் புத்தாண்டு, பெருமைகளை எல்லாம் நமக்கு சேர்க்குமா? நிரந்தரமான வருமானத்தை தந்து நிம்மதியை கொடுக்குமா? என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு பதில் சொல்லும் விதத்தில் 2013 இனிய வாழ்வை உங்களுக்கு வழங்கப் போகிறது.

காரணம் இந்த ஆண்டின் கூட்டுத் தொகை 6 உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்குரிய எண்ணும் 6. எனவே, இரண்டும் இணைந்து செயற்படும் பொன்னான நேரமிது.

தொட்ட காரியங்கள் துலங்கும். கைபட்ட இடமெல்லாம் வளரும். வெற்றி தேவதை உங்கள் வீட்டிற்கு வந்து குடியேறப்போகிறாள். கட்டளையிடும் பணியாளர்கள் ஒருபுறம். கார், வண்டி, பங்களாக்கள் ஒருபுறம். கொட்டிவைத்த செல்வக் குவிய லோடு, குடும்பத்தை நடத்துகின்ற வாய்ப்பும் உருவாகும் வருடமிது.

பொதுவாகவே உங்களுக்கு இரக்க சிந்தனை உண்டு. உறக்கமும் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். அரக்க பறக்க காரியம் செய்யலாமல். பக்குவமாக காரியங்களை செய்வதில் கைதேர்ந்தவர்கள் நீங்கள். உரக்கப் பேசமாட்டீர்கள். ஆனால், உள்ளதை எல்லாம் எடுத்துரைப்பீர்கள்.

உள்ளதை எல்லாம் உள்ளபடியே சொல்லுவதால்தான் எல்லோரின் உள்ளத்திலும் நீங்கள் இடம்பிடிக்கிறீர்கள். காளை வாகனம் கொண்ட சின்னம் தான் உங்கள் இராசி. நீங்கள் ஆளை மயக்கும் விதத்தில் பேசுவீர்கள்.

இந்த புத்தாண்டில் நீங்கள் மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய நாட்கள், மார்ச் 2 முதல் மே 21 வரை. மீண்டும், ஆகஸ்ட் 20 முதல் ஒக்டோபர் 8 வரை. இக்காலத்தில் செவ்வாய், சனியின் பார்வை இருப்பதால் வழிபாட்டில் கவனம் செலுத்தினால் வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.

உங்கள் சுயஜாதகத்தில் உள்ள கட்டங்களையும் புத்தாண்டில் உள்ள கிரக நிலைகளின் கட்டங்களையும்

சிவல்புரி சிங்காரம்

ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். வருட பிறப்பு நாள் வரும், பெரிய கிரகங்களின் மாற்றங்கள் உருவாகும் நாள் ஆகிய நிகழ்வுகளின் போது நமது சுயஜாதகத்தில் தெசாபுத்தி நன்றாக இருந்தால் செய்யும் காரியங்களில் சேரும் வெற்றி வாய்ப்பு. இல்லை யேல் கையில் இருக்கும் பணம் அனைத்தும் கரைந்துவிடும். கடவுள் வழிபாட்டினால் மீண்டும் பழைய நிலை உருவாகும்.

2013 ஆம் ஆண்டு சுக்கிரனுக்குரிய ஆண்டாக ஆறு எண் ஆதிக்கத்தில் அமைவதால் சுக்கிரபலம் உங்கள் சுய ஜாதகத்தில் எப்படி இருக்கிறது என்பதை சரிபார்த்துக் கொள்வது நல்லது. இராசிநாதன் சுக்கிரன் இந்த ஆண்டிற்குரிய எண்ணின் கூட்டுத் தொகையாக அமைவது யோகம்தான்.

*01.01.2013 முதல் 27.05.2013 வரை*

வருடத் தொடக்கத்தில் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரித்து ஆண்டு தொடங்குகிறது. எனவே, நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய கிரகங்கள் சாதகமான நிலையில் உலாவருகின்றன. குரு வக்ரகதியில் இயங்குவதால் தான் உங்களுக்கு நற்பலன்கள் நடைபெறும்.

அதன் பார்வை 5,7,9, ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, பூர்வ, புண்ணியத்தால் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பாக்கியங்கள் அனைத்தும் கிடைக்கும். குறிப்பாக சொத்து தகராறுகள் அகலும். சொந்த பந்தங்கள் உங் கள் சொற்கேட்டு நடக்க முன்வருவர். பிள்ளைகளின் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிகிடைக்கும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

திருமண பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும். வாரிசுகள் வெளிநாட்டு வாய்ப்பை



பயன் படுத்திக்கொள்ள் ஒத்துழைப்பு செய்வர். இல்லற வாழ்வில் இருந்த இடையூறுகள் அகலும். நல்லவர்கள் என்று நீங்கள் நினைத்தவர்கள் நலம் வந்துசேர உங்களுக்கு வழிவகுப்பர்.

சந்தரனுக்கு 4 இல் சனியும், இராகுவும் இருப்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் சில சமயங்களில் ஏற்படலாம். பெரியவர்கள் சொல்வதை பிள்ளைகள் கேட்காமல் பிரச்சினைகளை உருவாக்கலாம். குரு பெயர்சியாகும் வரை அதாவது ஜூன் மாதம் வரை கொஞ்சம் பொறுமையைக் கையாள்வது நல்லது.

6 இல் உச்சம்பெற்ற சனி உத்தியோகம், தொழிலில் உள்ள இடையூறுகளை அகற்றுவார். தேக்கநிலை மாறி ஆக்கநிலை உருவாகும். தேடிக்கொண்டிருந்த வேலை திடீரென கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில் தொடங்குபவர்களுக்கு வங்கிகள், வள்ளல்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

இருப்பினும் இராகு-கேதுக்களின் ஆதிக்கம் 6,12,இல் பின்னப்பட்டிருக்கிறது. ஆறில் உள்ள இராகு அஷ்டலக்குமி யோகத்தைக் கொடுக்கும் எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரத்தில் விரையங்களும் அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கும். எனவே, முறயாக இராகு கேதுக்களுக்கு பரிகாரம் செய்வதன் மூலம் பொன்னும் பொருளும் போற்றுகின்ற செல்வாக்கும் இன்னும் பெற வழிவகுத்துக் கொள்ளலாம்.

**28.05.2013முதல் 31.12.2013வரை**

இக்காலத்தில் மிதுனத்தில் குரு சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை 6,8,10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, நீண்டநாள் நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். தூண்டுகோலாக இருந்தவர்கள், துடிப்போடு செயற்பட்டு உங்கள் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்புக் கொடுப்பர்.

ஆண்டவனின் ஒத்துழைப்பும் கிடைக்கும். ஆண்டுகொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் உங்களுக்கு கிடைக்கும். எனவே வேண்டிய காரியங்களை நீங்கள் சாதித்துக் கொள்ள் இயலும். வேற்றுமை பாராட்டாமல் நீங்கள் பழகுவதால்தான் போட்டதிட்டங்கள் எல்லாம் நிறைவேறுகின்றன.

கடன்சுமை குறையும். கவலைகள் தீரும். இடம்மாற்றம் செய்வதற்காக எடுத்த முயற்சிகளை இனி கைவிட்டு விடுவீர்கள். இங்கேயே நீடித்திருக்கலாம் அங்கே சென்றாமலும் இனி அதே பிரச்சினைதானே வரும் என்று சொல்வீர்கள் நீடித்த நோயில் இருந்து நிவாரணம்பெற மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. சென்ற வருடத்தில் சிக்கல்களில் இருந்த சில பிரச்சினைகள் இப்போது நல்ல முடிவுக்கு வ்ரும்.

**குருவின் வக்ர காலம்**

குரு வக்ரம் பெறும்போதெல்லாம் நன்மைகளையே வழங்கும் உங்கள் இராசிக்கு 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குகிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும்போது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம் என்ற பழமொழிப்படி திட்டமிடாது செய்கிற காரியங்களில் வெற்றி கிடைக்கும் தித்திக்கும் செய்தி தினம் தோறும் வந்துசேரும். வங்கிக் கடன் சுமை குறையும்.

வாங்கிழி கடன் சுமை குறைந்தால், நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். நிலையான வருமானத்திற்கும் வழிபிறக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை மீண்டும் கைக்குவந்து மகிழ்ச்சியை உருவாக்கும். எதிர்காலத்திற்கான திட்டங்களைத் தீட்டி இதயம் மகிழ்வீர்கள்.

9ஆம் இடத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால், வாகனப்பழுது அதிகரிக்கும். வர்யப்புகள் கைநழுவாமல் இருக்க வியாழனின் வழிபாடு தேவை.

**சனி-செவ்வாய் பார்க்கும் காலம்**

ஒருசில கிரகங்கள், ஒருசில கிரகங்களைப் பார்த்தால் நல்ல பலன் கிடைக்கும். ஒருசில கிரகங்கள், ஒருசில கிரகங்களை பார்த்தால் போராட்டங்கள் ஏற்படும். பார்வை பலனால் அதிக பிரச்சினைகளை உருவாக்கும் சனியும் செவ்வாயும் பார்த்துக்கொள்ளும் நேரத்தில் நீங்கள் தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

ஏனென்றால் தொழில் ஸ்தானாதிபதி சனி. விரயாதிபதியாக விளங்குபவர் செவ்வாய். இரண்டும் ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளும்போது நடக்கும் தொழிலில் ஒன்று கையை விட்டுப் போகலாம். இடம், பூமியால் பிரச்சினைகள் ஏற்படலாம். தடம்புரளாதவராக இருந்தாலும் தடுமாற்றங்கள் ஏற்படலாம். அருகில் இருப்பவர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டினால்தான் உங்களுக்கு ஒத்துழைப்பு செய்வர்.

இக்காலத்தில் தெசாபுத்திக்கேற்ற தெய்வவழிபாடுகளை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து வாரவழிபாடு, மாதவழிபாடு என்று பிரித்துப் பட்டியலிட்டு வழிபடுவதுதான் நல்லது. அப்போதுதான் துயரங்கள் துள்ளியோடும். சனியின் வக்கரகாலத்தில் யாரையும் நம்பி கடன் கொடுப்பது கூடாது. உறவினர் பகையும் உருவாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

இடப இராசியில் பிறந்த உங்க



ளுக்கு வருடத்தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடும். கூட இருப்பவர்களை நம்பிச் செய்தகாரியங்களால் பிரச்சினைகள் உருவாகலாம். வரவு வந்த மறுநிமிடமே செலவாகும். ஜென்ம குருவின் ஆதிக்கம் முடியும்வரை குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

குருப்பெயர்சிக்குப் பின்னால் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பெற்றோர்வழி பிரியம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றுவீர்கள்.

கணவன் மனைவி இருவரும் பாசமழையில் நனைவர். சொத்துக்கள் உள்கள் பெயரில் வாங்குவதற்கான சூழ்நிலை உருவாகும். என்ன இருந்தாலும். 6,12 இல் சர்ப்பக் கிரகங்கள் இருப்பதால் முறையான சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு**

நன்மைகள் நடைபெறவும் நண்பர்களின் ஒத்துழைப்புக் கூடவும் பொன்மகளின் அருள் கிடைத்து பொருளாதார வசதி பெருகவும் பிரதோச நாளில் நந்தியம் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

உங்கள் பிறந்த திகதி மற்றும் கூட்டுத்தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து அதற்குரிய தெய்வங்களையும் தேர்ந்தெடுத்து வழிபட்டால் செயற்கரிய சாதனையாளரின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறலாம்.

(தொடரும்)

# மீண்டும் ஜெனீவா களத்தில் அமெரிக்கா கை கொடுக்குமா?

ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும் நிம்மதியும் நியாயமும் தமிழருக்குக் கிடைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் கூடவே வந்து விடுவது வழக்கம்.

போர் நடந்துகொண்டிருந்த காலத்தில்... இந்தப் புதிய ஆண்டிலாவது சண்டை ஓயாதா? என்றிருந்த கவலையும் எதிர்பார்ப்பும் இப்போது சற்று வித்தியாசமாக மாறியுள்ளது.

இப்போ மறுபடியும் தமிழருக்கு நிரந்தர அமைதியும் அரசியல் தீர்வும் இந்தாண்டிலாவது கிடைக்கவேண்டும் அது, என்ற எதிர்பார்ப்பாக மாறியுள்து.

ஆனால், நிரந்தர அமைதி அரசியல் தீர்வுக்கான எதிர்பார்ப்பு எல்லாமே இதுவரை வெறும் கனவாகவே கலைந்து போயுள்ளது.

இவ்வாண்டில் மிக முக்கியமானதொரு எதிர்பார்ப்புக்குரிய விடயமாக மாறியிருப்பது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடர்தான். வரும் மார்ச்மாதம் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில் தமிழர்களின் அவல நிலையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன்னிலைப்படுத்தப் போவதாக. தெரிவித்துள்ளது.

பரவலாகவே காணப்பட்டது.

ஆனால், கடைசி நேரத்தில் ஜெனிவா செல்லும் திட்டத்தை கூட்டமைப்பு கைவிட்டபோது அது, அரசாங்கத்தை காப்பாற்றும் நகர்வாக இருக்குமோ என்று சந்தேகம் கிளப்பியவர்களும் உண்டு.

ஆனால், ஜெனிவா தீர்மானத்திற்கு ஆதரவு தரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கைகளை விடுத்த பின்னர்தான் அந்த முடிவை எடுத்திருந்தது.

அப்போதைய சூழ்நிலையில் ஜெனிவாவிற்குச் செல்லும் அனைவரையும் இலங்கை அரசாங்கம் துரோகிகளாகவே இனம்காட்டியது. அவர்கள் திரும்பவும் இலங்கையில் கால்வைக்க முடியாது என்றும் மிரட்டியது.

அத்தகைய நிலையில் அமைதி வாய்ப்புகளை அது பின்தள்ளிவிடும் என்ற கருத்தின் அடிப்படையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சற்று ஒதுங்கி நின்று கொண்டது.

அதற்காக அப்போது அரசாங்கத்தின் பாராட்டைப் பெறவும் அது தவறவில்லை. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு இன்னமும் மூன்று மாதங்கள் உள்ள நிலையில் தமிழ்த்தேசியக்

உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கை இதில் வெளியிடப்படவுள்ளது. இதன் அடிப்படையில்தான், இலங்கை மீதான அடுத்தகட்ட நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானிக்கும்.

ஜெனிவாத் தீர்மானத்திற்கு அமைய இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை.

இதனை ஐ.நா அதிகாரிகளும் மேற்கு நாடுகளின் அதிகாரிகளும் தெளிவாகவே கூறிவந்துள்ளனர்.

இத்தகைய நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கொழும்புக்கு மேற்கொள்ளும் பயணத்தின்போதும் நிலைமைகளை ஆராயப்போகிறார்.

இவையெல்லாம் அடுத்த ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கான அழுத்தங்களை அதிகரிக்கும். இத்தகைய பின்னணியில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தக் கூட்டத்தில் தமிழர்களின் அவல நிலையை முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளது.

புதிய இராஜாங்கச் செயலராக அவர் ஜோன் கெரியை பரிந்துரைத்துள்ளார். ஜோன் கெரி இலங்கை அரசுடன் நெருக்கம் ஏற்படுவதை விரும்பும் ஒருவராக கணிக்கப்படும் நிலையில், அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடரில் அமெரிக்காவில் இலங்கை தொடர்பான இறுக்கமான போக்குத் தொடருமா? என்ற கேள்வி உள்ளது. அதுமட்டுமன்றி ஐ.நா. விற்கான தூதுவர் பதவியிலுள்ள சூசன்ரைஸ் அந்தப் பதவியில் தொடர்





அரசியல் கட்சிகளால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதையும் சமர்ப்பிக்க முடியாது என்றபோதும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அவலநிலையை வெளிக்கொண்டு வருவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்றும் தெரிவித்துள்ளது. இதற்காக் கிடைக்கின்ற வாய்ப்புகளை அதிக பட்சம் பயன் படுத்திக் கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இவ்வாண்டு மார்ச் மாத கூட்ட தொடர் பலத்த எதிர்பார்ப்புகளை உருவாக்கிவிட்டுள்ள நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு அதனை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது.

காரணம் இதுவரை தமிழ்த்

கூட்டமைப்பு தமிழர் பிரச்சனையை அங்கு முன்னிலைப்படுத்தப் போவதாக அறிவித்திருப்பது புதியதொரு திரும்பம் எனலாம்.

இது இலங்கை அரசாங்கத்திற்கு அதிர்ச்சியையும் எரிச்சலையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏனென்றால் கடந்த மார்ச் மாத ஜெனிவா கூட்டத் தொடரை விடவும் அடுத்த மார்ச்மாத கூட்டத் தொடர் மிக முக்கியமானது, ஆபத்தானது.

இதனை எதிர்கொள்வதற்கான வியூகத்தை இலங்கை அரசாங்கம் எப்போதோ வகுக்கத் தொடங்கிவிட்டது. அதன் ஒரு கட்டமாகவே ஆபிரிக்க, இலதீன் அமெரிக்க நாடுகளு

இது ஜெனிவாக் களத்தை இன்னும் பரபரப்பிற்கு உள்ளாக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதேவேளை கடந்த



வாரா என்பதும் முக்கியம். அவர்தான் ஜெனிவாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதில் முன்னோடியாக இருந்தவர். அவர் தொடர்ந்து அந்தப் பதவியில் இருந்தால் ஜெனிவாக் களம் இலங்கைக்கு சாதகமானதாக அமைய வாய்ப்பில்லை.

ஜோன் கெரியின் புதிய நிர்வாகத்தில் அவர் வேறு துறைக்கு மாற்றப்படுவாரேயானால், ஜெனிவாவில் தமிழர் தரப்பிற்கு பின்னடைவு ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை முன்னெடுத்த நாடு அமெரிக்கா என்பதால் அடுத்த கூட்டம் பற்றிய தீர்மானத்தில் அதன் இறுக்கமான போக்கு அதிகம் செல்வாக்குச் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எவ்வாறாயினும் அமெரிக்கா கைகொடுத்தாலும் சரி கை கொடுக்காது போனாலும் சரி தமிழர் தரப்பின் இன்றைய அவலநிலையை வெளிப்படுத்தும் ஒரே களமாக இப்போது ஜெனிவாவே உள்ளது.

அதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ளப் போவதாக கூறியுள்ளதும் முக்கியமானது. இந்த முடிவு உறுதியாகப் பின்பற்றப்படுமா? அது புதிய திருப்பங்களுக்கு வழிவிடுமா? என்பதை பிறக்கப்போகும் புதிய ஆண்டு தான் தெளிவுபடுத்தும்.

-ஹரிஹரன்-

## கூட்டமைப்பின் முயற்சி பலிக்குமா?

தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக நேரடியாக களமிறங்க வில்லை.

கடந்த மார்ச்மாதம் ஐ.நா உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்தபோது அந்தச்சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தை தோலுரிக்கவேண்டும் என்ற கருத்து

டன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தது.

அடுத்த ஜெனிவா கூட்டத்தொடர் என்பது இலங்கைக்கு மிகமுக்கிய மானதொரு கண்டம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏனென்றால் கடந்த மார்ச்மாத கூட்டத் தொடரில் அமெரிக்காவினால், கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தியுள்ளதா என்ற, ஐ.நா.மனித

மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்த அமெரிக்காவின் நிலைப்பாடு இம்முறை மாற்றம் காணுமா? என்ற கேள்வியும் உள்ளது. அதற்குக் காரணம் மெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஏற்படப்போகும் மாற்றங்கள்தான்.

வரும் ஜனவரி 21 ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக்காலத்தை தொடங்கவுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

# இரண்டு கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு நிவாரணம் இல்லை

## 153 குடும்பங்கள் பாதிப்பு

(மல்லாவி)

தொடர்மழையால் பாதிக்கப்பட்ட மாங்குளம், பனிக்கன் குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு இதுவரை ஒரு சிலருக்கு வழங்கப்பட்ட நுளம்பு வலையைத் தவிர அத்தியாவசியமான உதவிப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்த 27,28, 29 ஆம் திகதிகளில் தொடர் மழை காரணமாக 153 குடும்பங்களை சேர்ந்த 550 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களே இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு சமைத்த உணவுகள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரின் பணிப்புரைக்கு அமைய கிராம சேவகர்களால் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டது.

இங்கு பல கைக்குழந்தைகளையுடைய குடும்பங்களும் கர்ப்பிணித் தாய்மார், முதியவர்கள் உள்ளடங்கலாக தற்காலிக வீடுகள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாங்குளம் பிரதேச சர்வோதய நிறுவனத்தினரால் தமது கையிருப்பில் இருந்த ஒரு தொகுதி நுளம்பு வலைகள் ஒரு பகுதியினருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. ஏன்னயவர்களுக்கு அதுவும் கிடைக்கவில்லை.

தற்போது நீர் வற்றிய நிலையில் தங்களுடைய வீடுகளுக்குதிரும்பிய மக்கள் வீடுகளில் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்கள் பழுதடைந்தும் உடைமைகள் சேதமடைந்த நிலையிலும் தற்காலிக வீடுகளின் கூரைகள் மழையினாலும் காற்றினாலும் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் நிர்க்கதியாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுடைய இலவச பாட நூல்கள், சீருடைகள் உட்பட அவர்களது பாடசாலை உபகரணங்கள் அனைத்தும் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக கற்குவாரி, நீதிபுரம் ஆகிய கிராமங்களின் மக்களுக்கே இத்தாக்க வீதம் கூடுதலாக காணப்படுகின்றது.

இதேவேளை, வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து துரிதமாக செயற்பட்ட மாங்குளம் பிரதேச மூன்றாவது கஜபாகு படையணியின் இராணுவ தளபதி, இராணுவத்தினர் மக்களை உடனடியாக வெள்ளத்தில் இருந்து காப்பாற்றியமையில் பல சிறு குழந்தைகள் மற்றும் வயோதிபர்களது உயிர் காப்பாற்றப்பட்டதாக தெரிய வருகின்றது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு உடனடியாக அத்தியாவசியமான உதவிப் பொருட்களை வழங்கி உதவுமாறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# பாரத கொலை வழக்கில் சந்தேக நபர்கள் ஐவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மொத்தமாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐந்து பேருக்கு தலா 2 இலட்சத்து 50-ஆயிரம் ரூபா காசு பிணையிலும் 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

ஏனைய சந்தேக நபர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்க மறியிலில் வைக்குமாறு கொழும்பு பதில் நீதவான் கனிஷ்க விஜேவர்த்தன உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# சுமக்க முடியாத சுமையை அரசாங்கம் சுமத்துகின்றது

## கரு எம்.பி. குமுறுகிறார்

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பொதுமக்களிடம் இடுப்புப்பட்டிகளை இறுக்குமாறு கூறிய அரசாங்கம் யுத்தத்தின் பின்னரும் அதனை மாற்றாதுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

திருமண பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்கு அறவிடப்படும் கட்டணத்தைத் நேற்று முன்தினம் முதல் அதிகரிப்பதற்காக அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

திருமண பதிவாளர் அலுவலத்திற்கு வெளியில் மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்காக அறவிடப்படும் ஆயிரம் ரூபா கட்டணத்தை ஐயாயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

உயர் மட்டத்திலுள்ளவர்களுக்கு அல்லது அரசாங்கத்தின் உயர் மட்டத்திலுள்ளவர்களின் நண்பர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டினால் சுமக்க முடியாத அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி ஆலோசகர்கள் மூலம் பல்வேறு அரசியல் நியமனங்களை பெற்றுக் கொண்டவர்களுக்காக அரசாங்கம் வீண் விரயமாக்கும் நிதியை அறவிடுவதற்காக மக்கள் மீது வரி சுமையை சுமத்துவதாக அவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து கொள்ளையடிக்கும் நிதியை ஒரு குடும்பத்திற்கும் அமைச்சரவைக்கும் மற்றும் அரசியல்வாதிகளின் நெருங்கியவர்களுக்காக செலவிடுவதை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக அவரின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கை கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

தமிழகத்தில் இலங்கை தமிழர் முகாமைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் பரமத்தி இலங்கை தமிழர் முகாமை சேர்ந்தவர் கடாபி என்று அழைக்கப்படும் ராஜீ (வயது 24) என்பவர் மீது பல்வேறு கொள்ளை, திருட்டு மற்றும் வழிப்பறி வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் முகாமில் உள்ள வீட்டிற்கு அவர் வந்ததை அறிந்த பொலிஸார் விரைந்து சென்று அவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். விசாரணை நடைபெற்ற நிலையில் அவர் மேலும் தப்பிச் சென்றுள்ளார். (அ-2)




★1431-பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

★1496-லியனார்டோ டாவின்சி தனது பறக்கும் இயந்திரம் ஒன்றை சோதனையிட்டது வெற்றியளிக்கவில்லை.

★1754- அம்பலப்புழாவில் நடைபெற்ற சண்டையில் கொச்சி அரசரதும் நாடிழந்த ஏனைய அரசர்களினதும் கூட்டுப்படைகளைத் தோற்கடித்து அவரை எதிர்த்தவர்கள் அனைவரும் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் முறியடித்தார்.

★1815- ஆஸ்திரியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன இணைந்து புரூசியா மற்றும் ரஷ்யாவை எதிர்த்து இரகசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தின.

★1833-போக்லாந்து தீவுகளை பிரித்தானியா கைப்பற்றியது.

★1859- தமிழகத்தில் போளூர் பகுதியில் நிலநடுக்கம் பதியப்பட்டது.

★1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.

★1870-ரூக்ளின் பாலம் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின.

★1888- 91 ச.மீ. முறிவுத் தொலைநோக்கி முதன்முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரும் தொலைநோக்கி ஆகும்.

★1921- துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக் கொண்டது.

★1924- பண்டைய எகிப்தின் துட்டன்காமன் மன்னன் அடக்கம் செய்யப்பட்ட பெட்டியை பிரித்தானியாவின் தொல்லியலாளர் ஹவார்ட் கார்ட்டர் கண்டுபிடித்தார்.

★1925- இத்தாலியின் ஆட்சி அதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக முசோலினி அறிவித்தார்.

★1932- பிரித்தானியர் மகாத்மா காந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.

★1947-அமெரிக்கக் காங்கிரசின் அமர்வுகள் முதற்தடவையாக தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

★1956-ஈபெல் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.

★1957-முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.

★1958-மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.

★1959- அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49 ஆவது மாநிலமானது.

★1961- அமெரிக்க அரசு கியூபாவுடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.

★1961- இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் பலியாகினர்

★1966- இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் டாஷ்கெண்டில் ஆரம்பமாகின.

★1974-யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.

★1977-அப்பிள் கணனி நிறுவனமயப்படுத்தப்பட்டது.

★1990-பனாமாவின் முன்னாள் ஜனாதிபதி மனுவேல் நொரியேகா அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.

### பிறப்புக்கள்

★1740-கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன் (இ.1799)

★1956-மெல் கிம்சன், அவுஸ்திரேலிய நடிகர்

★1969-மைக்கேல் சூமாக்கர், ஜேர்மனியைச் சேர்ந்த பார்முலா 1 ஓட்டுநர்

### இறப்பு

★2005-ஜே.என்.டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி.1936)

# பாதாள உலகக்கோஷ்டியினர் விரைவில் வேட்டையாடப்படுவர்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

நகரின்அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே சமயம் பாதாள கோஷ்டியிரையும் போதைவஸ்து பாவனையாளர்களையும் அகற்றும் நடவடிக்கைகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் (www.cmc.lk)என்ற இணைய தளத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுற்றுலா பயணிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நகரமாக கொழும்பை மாற்றியமைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் முடியும்.

கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் சுமார் ஐயாயிரம் வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர்கள் எதிர் கொள்ளும் வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

நகரின் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற அதேசமயம் பாதாள கோஷ்டியினரையும் போதைவஸ்து பாவனையாளர்களையும் அகற்றும் நடவடிக்கைகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பல தோட்டங்களுக்கு நாங்கள் நேரில் சென்ற போது குழுபோன்ற போதைவஸ்து பாவனையாளர்கள் இங்கிருந்து இல்லாமல் செய்யுமாறு அந்த மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்தனர்.

எதிர்கால சந்ததியினர் நலனை கருத்திற் கொண்டு முப்படையினர் மற்றும் பொலிஸாரை ஈடுபடுத்தி அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.சேரிப்புறங்களை அகற்றி அங்குள்ள பிள்ளைகளை பொருத்தமான இடத்தில், சூழலில் வாழ வைப்பது, அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதே எமது நோக்கம். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளே பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

எனவே வீதி சுத்தம் செய்யும் சாதாரண ஊழியர் தொடக்கம் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் என அனைவரும் அர்ப்பணிப்புடனும் வேகமாகவும் செயற்படுவதன் மூலம் நாங்கள் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியும் என்றார். (அ-2)

# முல்லைத்தீவில் சில்லறை தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில்லறை தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா ஆகிய குற்றி நாணயங்களுக்கும் குறிப்பாக பத்து, இருபது, ஐம்பது, நூறு ரூபா தாள்காசுகளும் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வங்கிகள் காணப்படுகின்ற போதும் சில்லறைத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இவ்வாறு சில்லறை தட்டுப்பாடு நிலவுகின்றமையால் வர்த்தகர்கள், கடை வியாபாரிகள் கொள்வனவு விற்பனைச் செயற்பாடுகளின் போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் பொருட்களை வாங்கிய கொள்வனவாளர்களுக்கு மீதிப் பணத்தை வழங்காது பொருட்களைக் கொடுக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் கவனமெடுத்து சில்லறை தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# சிற்றூர்தி சேவைச் சங்கங்கள் நிபந்தனையுடன் இணைகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டசிற்றூர்திச் சேவைச் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு பருத்தித்துறை சிற்றூர்திச் சேவைச் சங்கம் நிபந்தனையடிப்படையில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இரு சங்க உறுப்பினர்களிற்கு இடையிலான சந்திப்பொன்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் நாளை மறுதினம் சனிக்கிழமை யன்று மேலுமொரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் போதே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பு டுகிறது.

கடந்த வருடம் மார்கழி மாதம் 30ஆம் திகதியன்று இரு சிற்றூர்தி சங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் போத்தல் குத்துக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டமை தெரிந்ததே.

மேலும் இவ்விரு சிற்றூர்திச் சங்கங்களும் நீண்டகாலமாக பிரிந்த நிலையிலேயே இயங்கி வருவதோடு அவ்வவ்போது சில முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

# இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் சீராக அமைக்கப்படவில்லை

## சீமெந்து சுவர்களே வெடிக்கும் நிலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணவாளன் பட்டமுறிப்பு கிராம சேவகர் பிரிவில் பெரியகுளம் கிராமத்தில் உள்ள 74வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்ட வேலைகளில் குளறுபடிகள் காணப்படுவதாக பயனாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த கிராம மக்களுக்கு வழங்குவதற்கென கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்ட வேலையானது 2012 ஆண்டு சித்திரை மாதம் 74 பயனாளிகளிடம்வீடுகள் கையளிக்கப்பட்டது.

குறிப்பாக வீடுகளுக்கு மலசலகூடங் களுக்கும் போடப்பட்ட வீட்டு ஓடுகள் சீராக பொருத்தப்படாமையினால் மழை காலத்தில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வீட்டின் யன்னல், கதவுகள் மற்றும் புகைக்கூடுகள் என்பன சரியான முறையில் அமைக்கப்படவில்லை.

அத்துடன் வீட்டின் வெளிச்சுவர் வெடித்து காணப்படுகின்றது.சீமெந்தினால் அமைக்கப்பட்ட நிலம் தடிப்பின்றி காணப்படுகிறது.

எவ்வித நிதியும் பயனாளிகளிடம் வழங்கப்படாது தாமே நிர்மாணித்து வழங்கப்பட்ட வீட்டிற்கு 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.ஆனால் அத்தொகைக்கேற்ப வீட்டு வேலைகள் இடம் பெறவில்லையென பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வேலைகளின் குளறு தொடர்பாக உரிய தரப்பினரிடம் பல தடவை கூறியும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே உரிய தரப்பினர் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயனாளிகள் கண்ணீர் மல்க் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# சாரதி அனுமதி பத்திரத்திற்கு புள்ளியிடும் முறைமை

(கொழும்பு)

போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரின் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு புள்ளியிடும் முறைமை நேற்று தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதன் முதற்கட்டத்தின் கீழ் மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் மற்றும் வீதி விபத்துக்குள்ளாகும் சாரதிகளுக்கு புள்ளியிடப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எச்.எஸ். ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தவறொன்றுக்கு 12 புள்ளிகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் குறிப்பிட்டது.

இதேவேளை ஒருவருக்கு 24 புள்ளிகள் கிடைக்கும் பட்சத்தில் அவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருட காலம் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் மேலும் கூறினார். (அ-2)

# அணுப்பரிசோதனை ஒப்பந்தம்; இந்தியா-பாகிஸ்தான் பரிமாற்றம்

(கொழும்பு)

அணு நிறுவல் தொடர்பான 22 ஆவது தொடர் ஒப்பந்தம் இந்தியா-பாகிஸ்தான் இடையே இன்று பரிமாற்றம் செய்யப்படுகிறது. இவ் ஒப்பந்தம் ஆண்டுதோறும் புத்தாண்டு பிறக்கும் ஜனவரி முதல் வாரத்தில் புதுப்பித்துக் கொள்ளப்படும்

புதுடில்லியில் இன்று இரு நாட்டு அதிகாரிகளும் இந்த ஒப்பந்த பரிமாற்றம் செய்து கொள்கின்றனர்.

கடந்த 1988ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1991 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட இந்த ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கடந்த 21 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இந்த ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளும் தாங்கள் மேற்கொள்ளும் அணு தொடர்பான நிறுவனங்கள் மற்றும் தங்களிடம் உள்ள சிறப்புக்கள் மற்றும் பயங்கரவாத தாக்குதலில் இருந்து காத்துக்கொள்ளும் விதமான சரத்துக்களும் இதில் அடங்கி இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் படி இதுவரை இரு நாடுகளும் சரியாக பின்பற்றி வருவதாக டில்லி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த தகவலை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் தேசிய மாணவர் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட துண்டுப் பிரசுர விநியோக நடவடிக்கையொன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றதை படத்தில் காணலாம்.




2013 ஆம் ஆண்டுக்கான நிதி திட்டத்திற்கு அனுமதி வழங்கி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று முன்தினம் அவரது பணிமனையில் வைத்து ஆவணத்தில் கையொப்பமிடுவதையும் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, பிரதி பிரதம செயலாளர் (நிதி) அ.மனோரஞ்சன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# மருந்துகளின் சில்லறை விலை வர்த்தமானி அறிவித்தலில்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலைகளைக் குறிப்பிடும் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்றைய தினம் தெரிவித்துள்ளார்.

ஒரே கம்பனியில் தயாரிக்கப்பட்ட ஒரே மருந்தை பல்வேறு மருந்தகங்கள் பலதரப்பட்ட வலைகளில் விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

முன்னர் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் மருந்தாளர்கள் விலையைக் குறிப்பிட்டனர். ஆனால் வர்த்தமானி அறிவித்தலின்படி உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மாத்திரமே இதைச் செய்யமுடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பலதரப்பட்ட விலைகளில் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதை நிறுத்துவதற்காக சுகாதார அமைச்சுடன் இணைந்து மருந்து விற்பனை தொடர்பாக மேலும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் எண்ணியுள்ளோம். அடுத்தபடியாக மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

# வான்வழித் தாக்குதலில் பார்க் போராளிகள் பலி

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் இடதுசாரி போராளிக்குழுவான பார்க் அமைப்பு அந்நாட்டு அரசுக்கு எதிராக சண்டையிட்டு வருகிறது.

இவர்களுக்கு எதிராக ஆண்டியோகுயா பகுதியில் உள்ள சிகரோடோ போராளிகள் முகாமில் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தியதில் போராளிகள் 13 பேர் கொல்லப்பட்டனர்.

இப்பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு போராளிகள் நடத்திய தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கியூபா நாட்டில் பார்க் போராளிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு அரசு முயற்சிகள் எடுத்து வரும் நிலையில் அவர்களுக்கு எதிராக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு நவம்பர் மாதத்திற்கு பார்க் அமைப்பினர் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும் என்று கொலம்பியா ஜனாதிபதி ஜீவன் மேனுவல் சாண்டோஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# சாரதாதேவியின் ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தி இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 160 ஆவது ஜெயந்தி விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி ஜானகி கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் அன்பால் அரவணைக்கும் அன்னை எனும் தலைப்பில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் உரையாற்றவுள்ளார். (அ-9)

# வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## பொது அறிவித்தல் - 2013

### 1.அச்சுவேலி / உரும்பிராய் / கோப்பாய் / நீர்வேலி / புத்தூர் உப அலுவலக ஆதனவரி அறிவித்தல் –2013

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2013ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 2013.01.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் ஏனைய ஆதனங்கள் முறையே 15%மும், 20%மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தாங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 2013.01.31ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

### 2. வியாபார உரிம அனுமதிப் பத்திரம் 2013

எமது பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2013ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தினை பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தினை 2013ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி அச்சுவேலி / உரும்பிராய் / கோப்பாய் / நீர்வேலி / புத்தூர் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2013.01.31ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 3. சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சுற்றாடல் அதிகார சபைத் தலைவரின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16ஆம் இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18ஆம் இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை அல்லது தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலி கிழக்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தினை பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2013 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் உள்ள தொழில்களை நடாத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் அச்சுவேலி / உரும்பிராய் / கோப்பாய் / நீர்வேலி / புத்தூர் உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

### 4. படவரைஞராகப் பதிவு செய்தல் 2013

2013ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 5. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளை சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்

5.1. வலி கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள். குழாய்க்கிணறுகள் என்பவற்றை நிர்மாணித்தல், புதுப்பித்தல் வேலைகள் மேற்கொண்டால் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

எனவே வலிகிழக்கு பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத் தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் கட்டிடங்கள் யாவும் அகற்றப்படும்போது எதுவித நட்டஈடும் சபையினால் வழங்கப்படமாட்டாது.

5.2 ஏற்கனவே அனுமதிபெற்று ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியினைப் புதுப்பித்தல்வேண்டும்.

5.3 அனுமதி பெற்றுக் கட்டடம் அமைத்தவர்கள் முடிவுறுத்தப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளவேண்டும்.

### 6. துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்

2013ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமத்தை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### 7. வீதி ஒழுங்கைப் பேணல்

வலிகிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்துக் காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வீதி சட்ட ஒழுங்கை பேணுமாறும் வீதியோரங்களில் பூமரங்களை நாட்டி அழகுபடுத்துவதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

### 8. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

இப் பிரதேச சபையின் நிர்வாகப் பரப்பிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் வர்த்தக நிலையங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் காட்சிப்படுத்தும் விளம்பரங்களை 2013.01.31ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் /வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

அ.உதயகுமார்,
தவிசாளர்,
வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

31.12.2012 (சி-1999)

# வடமாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான கூட்டத் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் இடமாற்ற தீர்மானங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் அமைக்கப்பட்ட விசேட இடமாற்ற சபையின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் பின்வரும் முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அவை வருமாறு,

✦ இவ்விடமாற்றங்கள் யாவும் தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை மற்றும் வடமாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கை என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ளது.

✦ இலங்கையில் தமிழர் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 19 ஆலோசனைகளும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட 10 ஆலோசனைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு இவ்விடமாற்ற சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும். ஏற்புடைய ஆலோசனைகள் இவ்விடமாற்றத்திற்கான அடிப்படையாகக் கொண்டு இவ்விடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. மத்திய கல்வி அமைச்சு சுற்றறிக்கைக்கு அமைவாக அதிக கஷ்ட, கஷ்ட பிரதேச பாடசாலைகளாக இனங்காணப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படும் பாடசாலைகள் இடமாற்ற நோக்கத்திற்காக கஷ்ட பிரதேச பாடசாலைகளாக கருத்தில் எடுக்கப்படமாட்டாது. பதிலாக இடமாற்ற சபையினால் தீர்மானிக்கப்படும் பாடசாலைகள் மட்டுமே இடமாற்றத்தில் கஷ்ட பிரதேச பாடசாலையாக கவனத்தில் கொள்ளப்படும்.

✦ இவ்வாசிரியர் இடமாற்றத்தின் போது கடந்த 2012 ஆம் ஆண்டு ஆசிரியர் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தவர்கள் அவர்களுக்கு பதில் ஈடாக உரிய இடங்களுக்கு இட மாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களும் இடமாற்றத்தின் போது கவனத்தில் கொள்ளப்படுவர். வன்னி பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு பதிலீடாக அதே எண்ணிக்கையான ஆசிரியர்கள் அப்பிரதேசங்களுக்கு ஏனைய வலயங்களில் இருந்து அனுப்பி வைக்கப்படுவார்கள்.

✦ இவ்விடமாற்ற சபை தீர்மானங்கள் இடமாற்ற சபையால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் எதிர்வரும் ஜனவரிமாதம் 15 ஆம் திகதி ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் சட்டரீதியான ஆவணமாக ஒழுங்கமைக்கப்படும். இவ்விடமாற்றம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரக்கூடியதாக அமுல்படுத்தப்படும்.

✦ இடமாற்ற கட்டளைகள் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் புதிய நிலையங்களில் தமது கடமையை பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்காதவிடத்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளபடும்.

✦ இவ்விடமாற்ற சபையானது ஒவ்வொரு வலயத்திலும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விபரங்கள் ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமாகாண பாடசாலைகளில் அதிபர் இடமாற்றங்கள் தொடர்பாகவும் இவ் விடமாற்ற சபையானது தமது சிபாரிசினை ஆளுநருக்கு சமர்ப்பிக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-9)


## தமிழர் படுகொலை. தொகுப்பு மராத்தி மொழியில் வருகிறது

ஈழப்போரில் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இது தொடர்பான நிகழ்வு தொகுப்பை அனைத்து மொழியிலும் வெளியிட்டு வருவதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாளை மறுதினம் சனிக்கிழமை மராத்தி மொழியில் இந்நிகழ்வுத் தொகுப்பை வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் ராம் ஜெத்மலானி கலந்து கொள்ளவுள்ளார். இதனையடுத்து பஞ்சாபி, காஷ்மீரி மொழியிலும் வெளியிடவுள்ளோம் எனவும் வைகோ தெரிவித்துள்ளார். (அ-2)

## நல்லூர் கந்தனுக்கு அருகில் காவலரண்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் இராணுவத்தினர் முகாம் ஒன்றினை அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதாக அப்பகுதி மக்கள் சிலர் தெரிவிக்கின்றனர். இப்பாதுகாப்பு நடவடிக்கை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நீடித்து வருகின்ற போதிலும் தற்போது அது வெளியிப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நல்லூர் ஆலய சூழலில் கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக சிவில் உடை தரித்த இராணுவத்தினரும் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் சீருடை தரித்த இராணுவத்தினரும் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனினும் தற்போது நல்லூர் கந்தன் ஆலயத்தின் வெளி வீதியில் தென்கிழக்கு மூலையில் தகரங்களினால் அமைக்கப்பட்ட காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு தினமும் அதில் இரண்டு அல்லது மூன்று இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வழிபாட்டு ஸ்தலத்திற்கு இராணுவத்தினர் ஏன் பாதுகாப்பு வழங்குகின்றனர் என நல்லூர் ஆலயத்தின் தொண்டர் ஒருவரின் அனுமதி கேட்டபோது கோயில் பிரதம பூசரின் அனுமதி பெற்றே அவர்கள் (இராணுவத்தினர்) அங்கு இருப்பதாகவும் அருகில் அரச வங்கி ஒன்று காணப்படுவதனால் அதற்கு அவர்கள் பாதுகாப்பு வழங்குகின்றனர் எனவும் கூறினார்.

அண்மையில் நல்லூர் சூழலில் காணப்பட்ட தியாகி திலீபனின் நினைவுக் கல்வெட்டு இனந்தெரியாதோரால் தகர்க்கப்பட்டதோடு வர்த்தகர் துவாரகேஸ்வரன் மீதும் அசிட் வீச்சு தாக்குதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வழிபாட்டு தலத்தில் இராணுவத்தினர் இவ்வாறு பாதுகாப்பு பணியில் ஈடுபடுவது கோயிலுக்கு வரும் பக்தர்களின் மனநிலையினைக் குழப்பிவிடுவதாக நல்லூர் கந்தனின் அடியவர்கள் சிலர் தெரிவித்தனர். (அ-4)

## சர்வதேச வர்த்தக கண்காட்சி ஜனவரி பதினெட்டாம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், இலங்கை கண்காட்சிகள். மற்றும் மாநாடுகள் சேவைகள், தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வடக்கின் மிகப் பிரசித்திபெற்ற இக்கண்காட்சி வடக்கு கிழக்கின் தொழிற்றுறை அபிவிருத்தியில் ஒருமை மைல்கல்லாக அமைந்துள்ளதுடன் வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே பாலமாக அமைந்து வர்த்தக தொடர்புகளைப் பலப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சியில் காட்சிக் கூடங்களை அமைக்க விரும்புவோர் இல124, இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

குறித்த கண்காட்சி தற்போது 4ஆவது தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பணக்காரர்களுக்கு அதிகவரி; அமெ.வில் மசோதா நிறைவேறியது

பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்கும் மசோதா அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ளது. உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக உள்ள அமெரிக்கா தற்பொழுது நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது.

எனவே பணக்காரர்களுக்கு அதிக வரி விதிப்பது தொடர்பான மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேல் சபையான செனட்டில் கொண்டு வரப்பட்டது. ஒபாமாவின் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் இந்த செனட்டில் அதிகளவு இருப்பதால் இந்த மசோதாவுக்கு ஆதரவாக 89 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைத்தன.

இதனையடுத்து அம்மசோதாவை பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கின.

இதன்பின் பிரதிநிதிகள் சபையின் இந்த மசோதா மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் மசோதாவுக்கு ஆதரவாக 257 வாக்குகளும் எதிராக 167 வாக்குகளும் கிடைத்தன.

இரண்டு சபைகளிலும் ஒப்புதலை பெற்றுள்ளதையடுத்து மசோதா ஜனாதிபதி ஒபாமாவின் ஒப்புதலோடு அமுலுக்கு வரும்.

அம்மசோதாவின் படி தனிநபர் வருமானம் 4 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இருந்தாலோ அல்லது குடும்ப வருமானம் 4 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக இருந்தாலோ அவர்கள் பணக்காரர்களாகக் கருதப்பட்டு அதிகவரி விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## நாகை மீனவர்களின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு தமிழக அரசு அனுமதி பெற்றுத்தருமாறுகோரி நாகை மற்றும் காரைக்கால் விசைப்படகு மீனவர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்த போராட்டம் 5 ஆவது நாளாகவும் தொடர்கிறது. இதேவேளை காரைக்காலில் 3ஆவது நாளாக மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் குறித்த சில காலப்பகுதிகளில் அதிகளவான மீன்களை பிடிக்க முடியும் எனவும் அக்காலத்தில் இந்திய மீனவர்கள் அங்கு மீன்பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரியும் இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

ஓட்டவந்த பசாசு
ஊர்ப் பிசாசைக் கலைத்ததாம்
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சங்கக்கடைகளுக்கு ஏற்பட்ட கதி வடபகுதி வர்த்தகர்களுக்கும் ஏற்படக் கூடாது

அ.செ.முருகானந்தம் என்ற நாடறிந்த எழுத்தாளர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்தார். சிறுகதை மற்றும் நாவல் புனைவதில் காத்திரமான இடத்தை வகித்த அவரின் மனிதமாடு என்ற சிறுகதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பாடவிதானத்தில் ஒரு பகுதியாக இடம் பெற்றிருந்தது.

ஆனாலும் இத்துணை சிறப்புமிக்க அ.செ.முருகானந்தத்தின் பிற்காலம் மிகவும் துன்பமானதாக அமைந்து போனது.

அவரின் சிறுகதைகள் ஈழத்தின் தமிழ் சிறுகதை வரலாற்றில் கொண்டிருந்த முக்கியத்துவம் கருதியேனும் அந்த அற்புத எழுத்தாளனை ஈழத்தமிழினம் பராமரித்திருக்க வேண்டும்.

ஆனால் அதனைச் செய்ய தமிழ்ச்சமூகம் தவறிவிட்டதென்ற உண்மையை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

சிறுகதைப்பரப்பில் அ.செ.முருகானந்தத்தின் கதைகள் பலருக்குப் படிப்பினையாக இருந்தாலும் அ.செ.முருகானந்தத்தின் வயோதிபக்கால அனுபவங்கள் எங்கள் எல்லோருக்கும் பாடம் என்பதை எவரும் நினைத்துப்பார்ப்பதில்லை.

எதுவாயினும் சமூகப்பெறுமானமுடையவர்களைப் போற்றிப் பாதுகாக்கின்ற கடப்பாடு எங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் பல சந்தர்ப்பங்களில் மறந்து போன வரலாற்று தவறுகள் நிறையவே உண்டு.

இவை தனி மனித விடயங்களாக இருக்கும் அதேவேளை,

நிறுவன அமைப்புகள் என்ற பக்கத்தில் எங்கள் துன்பத்திலும் இன்பத்திலும் பங்கேற்று எங்கள்உயிர்காத்த வடபகுதிப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையை நினைத்தால், வேதனைதான் மிஞ்சும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த
வற்றுள் எல்லாம் தலை

என்ற வள்ளுவரின் அறக்கூற்றை காப்பாற்றிய எங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று யாருமற்ற அநாதைகளாக தனிமையை தாங்க முடியாது இயற்கை எய்தும் கட்டத்தில் இருப்பதைப்பார்த்து யாரேனும் வேதனைப்படுவதாகத் தெரியவில்லை. இதுதான் உலகம் என்று விட்டுவிட்டால்,

போர்க்கால சூழ் நிலையில் வடபகுதி தமிழர்களின் உயிர்காத்த பணியில் பெரும்பங்குடைய வடபகுதி வர்த்தகர்களின் நிலைமையும் இதுவாக மாறும் பரிதாபம் உண்டு.

ஆம், வடக்கு நோக்கி அதிலும் குறிப்பாக யாழ்.குடாநாடு நோக்கிப் படையெடுக்கும் தென்பகுதி வர்த்தகர்கள், நடைபாதை வியாபாரிகள் குடாநாட்டு வர்த்தகர்களின் குரல்வளையை இறுக்குகிறார்கள்.

குச்சொழுங்கைகள் தோறும் வீடு தேடிச் சென்று அவர்கள் செய்கின்ற வியாபாரத்தை வியாபாரத்தந்திரம் என்று விட்டுவிட்டால், ஆண்டாண்டு காலமாக எங்களோடு இருந்த வர்த்தகர்களுக்கும் சங்கக்கடை நிலைதான் ஏற்படும். எனவே இது தொடர்பில் வர்த்தக சங்கங்கள் விழிப்படைந்து மாற்றுவழிபற்றிச் சிந்திக்க வேண்டும்.

# அன்பும் பண்பும் நிறைந்து ஆன்மீக வழிநடந்த சிவசாமி ஐயர்

## மறைந்தார் மாண்பு

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத்தீவின் சிரம் என விளங்கும் யாழ்.குடாநாட்டில் அன்பும் பண்பும்அறநெறியும் காக்கும் தெய்வீகத்திருவூர் உத்தர கோவையில் கந்தசாமி ஆலயத்தின் சூழலில் புகழ் பூத்த பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் மீனாட்சி அம்மா தம்பதியினருக்கு 1920ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆம் நாள் வரமாய் வந்துதித்த கனிஷ்ட புதல்வன் சிவசாமி ஐயராவார்.

தொண்ணூற்று இரண்டு ஆண்டுகள் இந்தப் பூமியில் நிறைவாழ்வு வாழ்ந்த சிவசாமி ஐயாவின், பெருந்தன்மைகள் அவரை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். 1966ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயத்தின் சிவாச்சாரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர், 1976ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையான 10ஆண்டுகள் மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகருக்கு திரிகரண சுத்தியோடு ஆற்றிய பூசை வழிபாடுகளே அவரின் நிறைவான வாழ்வுக்கு மூலகாரணம் எனலாம்.

ஈழத்துச் சிற்றிலக்கியப் புலவர்களிலே சிறப்பாகக் கூறப்படுபவரும் சோதிட வல்லுநருமான சி.அகிலேஸ்வரசர்மா அவர்களின் சமய வழிமுறைகளை நன்கு சரிவரக் கடைப்பிடித்தவர் சிவசாமி ஐயா. அகிலேஸ்வர சர்மாவின் காலத்தின்பின் இவருடைய காலத்திலேயே திருவெண்காட்டில் உறையும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான்; அருள்மிகு ஒளிக் காட்சி அளித்ததைக் காண முடிந்தது.

அறிவூட்டும் புத்தகங்கள்,பத்திரிகைகளை வாசித்து நல்லறிவை பெருக்கிக் கொண்ட ஐயா அவர்கள்; மார்கழி மாதத்தில் இந்தியாவில் நடைபெறும் இசை விழாக்களை வானொலியில் கேட்டு மகிழும் இசை ரசிகராகவும் விளங்கினார்.

நீராவியடியைச் சேர்ந்த சரஸ்வதி அம்மாவைத் திருமணம் செய்தார். மனைவி இளமையில் இறைபதமடைந்ததால், தன் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் முழுப்பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டார்.

மண்டைதீவில் அவர் திருவிளக்கு ஏற்றிய காலத்தில்தான் தன்பிள்ளைகளை உரிய கல்வி கற்பித்து மூத்த மகனை சமஸ்கிருத பண்டிதராகவும் மற்றைய பிள்ளைகளை உயர்கல்வி கற்று அரச உயர் பதவிகள் பெறவும் குருத்துவம் செய்தும் மனநிறைவு கண்டார். இதேவேளை, ஆலயத்தை நாடி வருவோருக்கும் புத்திமதிகள் கூறும் பெருந்தன்மையை அவர் கொண்டிருந்தார்.

கற்றதைத் தம்மோடு வைத்துக் கொள்ளாது அதனை மற்றவர்களுக்கும் எடுத்துரைக்கும் பண்பு அவரிடம் இருந்ததைக்கண்டு அதிசயித்த ஞாபகங்கள் நிறையவே உண்டு.

மண்டைதீவு மக்கள் அவர்மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.



பத்து ஆண்டு காலம் கோப்பாயில் இருந்து மண்டைதீவுக்கு வந்து திருவெண்காட்டுச் சித்தி.விநாயகரின் பூசை வழிபாடுகளை இடையறாது நடத்திய பிரம்மஸ்ரீ சிவசாமி ஐயா அவர்களின் புனிதமான பணிக்கு திருவெண்காட்டான் அருளிய திவ்விய கருணையினால் ஐயா அவர்கள் 92 ஆண்டுகள் இந்த மண்ணில் ஆரோக்கியத்துடன் தன் குடும்பச் செழிப்பைக் கண்டு மகிழ்ந்து வாழ்ந்தார்.

ஐயாவின் புனித ஆத்மா திருவெண்காட்டுப் பெருமானின் திருவடிகளில் நித்திய பேரின்பம் அடைய அவன்தாள் வணங்குகின்றோம்.

சி.ஆ.சச்சிதானந்தபிள்ளை
முன்னாள் தலைவர்.
மண்டைதீவு இந்து இளைஞர் மன்றம்.

# இனந்தெரியாதோரின் நடமாட்டம் குறித்து புற்றுநோய் வைத்திய நிபுணர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் நடராஜா ஜெயக்குமாரன் வீட்டுச் சூழலில் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் இருப்பதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் இரவு வேளையில் எனது வீட்டிற்கு அருகில் இரு நபர்கள் பேசிக்கொண்டு நின்றனர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தது எனக்கு தெளிவாகக் கேட்டது.

அவர்கள் எனது வீட்டினை சுட்டிக் காட்டி இதுதான் வைத்திய நிபுணரின் வீடு என பேசிக்கொண்டனர்.

எனினும் நான் மின்குமிழை ஒளிர விட்டு வெளியே வந்து பார்த்தபோது அங்கு யாரும் இல்லையென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முறைப்பாட்டினையடுத்து வைத்திய நிபுணரின் வீடு காணப்படும் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வைத்திய நிபுணரின் வீட்டிற்கு கடந்த வருடம் ஜூலை மாதம் 14 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களினால் கழிவொயில் வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அக் கழிவொயில் வீச்சு சூத்திரதாரிகள் நேற்றுவரை பொலிஸாரினால் இனங்காணப்பட வில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (எ-4)

# மகர ஜோதி பெருவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தான மகரஜோதி மண்டல விரத ஐயப்ப பெருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினரின் விசேட மேளக்கச்சேரியும் விசேட புல்லாங்குழல் கச்சேரியும் நடைபெற்று விசேட அபிசேகம், பஜனை, பதினெட்டுப்படி பூசை நடைபெற்று அடியவர் கட்கு சக்தி பூசையும் இடம்பெறும் என ஐயப்பன் தேவஸ்தான அறங்காவலர் தெரிவித்துள்ளார். (செ-8)

## சத்திய தரிசனம்



ஆத்மாவின் சக்தியைப் புரிந்துகொள்ளவேண்டும் என்றால் முதலில் மனதின் இயல்பைப் பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த மனமே பிறப்பிற்கும் பொறுப்பு. இறப்பிற்கும் பொறுப்பு- செயலுக்கும் குடும்பத்திற்கும் குழந்தைப்பருவம், முதுமை, மகிழ்ச்சி, துக்கம், வெற்றி, தோல்வி என அனைத்துக்கும் பொறுப்பு.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோயிலை வலம் வருவது எதற்கு?

கோயில் தரிசனத்துக்குப் போகும் இளைஞர்களிடம் பெரியோர்கள் கோயிலை வலம்வர மறந்துவிடாதே என்று கூறுவதுண்டு. கோயிலை வலம் வரவேண்டும் என்பதே இப்போதனை. இதன் பின்னால் சிறப்பான ஓர் அர்த்தமும் சாஸ்திரமும் உண்டு.

காலையிலும் மாலையிலும் பொதுவாக உடற்பயிற்சியின் வேளைகளாக நாம் பழக்கப்படுத்தியுள்ளோம். இது இயலாதவர்களுக்கு கோயில் தரிசனமும் கோயிலை வலம் வருவதும் நல்ல உடற்பயிற்சியாக அமையும். சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் எளிதில் செய்யக்கூடிய ஓர் உடற்பயிற்சியே கோயிலை வலம் வருதல், காலணிகளைக் களைந்து வலம் வருதல், தோப்புக்கரணமிடுதல், கும்பிடுதல் முதலியவை உடற்பயிற்சியின் சக்தியை அதிகரிக்கின்றது. இவ்வாறு நாமறியாமலே உடலிலுள்ள எல்லா முட்டுக்களும் தசைகளும் நன்றாக அசைவடையும் ஓர் உடற்பயிற்சியே கோயில் தரிசனத்தில் நாம் செய்வது.

வலம்வைத்தல் என்பது வலதுபக்கம் சுற்றிவருதல் என்பதே. பொதுவாக கோயில் வலம் வருவது வலது பக்கமாகத்தான். இப்படிச்செய்வதில் நாம் இறைவனுடன் கூடுதல் நெருங்குகின்றோம் என்பது ஆசாரியர் படிப்பினை. கோயிலை வலம்வரும்போது முன் ஜென்மங்களில் செய்த பாவமும் அழிந்துவிடும் என்பது நம்பிக்கை.

யானி யானிச பாபானி ஜன்மாந்தர கிருதா- நிச
தானி தானி வினஸ்யந்திப்ரதக்ஷிணபதே பதே

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர், T-20 அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளுக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமான மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் ஜனவரி 11ஆம் திகதியும், 2 ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடர் ஜனவரி 26ஆம் திகதியும் ஆரம்பிக்கவுள்ளது.

மஹேல ஜெயவர்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட அணியில், டெஸ்ட் குழாமில் இடம்பெற்றிருக்காத உபுல் தரங்க, திஸர பெரேரா, லசித் மலிங்க, அகில தனஞ்சய, அஜந்த மெண்டிஸ், ஜீவன் மெண்டிஸ், குஷால் ஜனித் பெரேரா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதில் குஷால் ஜனித் பெரேரா இலங்கை அணிக்கு அழைக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட அணி:

மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், திலகரட்ண டில்ஷான், உபுல் தரங்க, லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால், லசித் மலிங்க, நுவான் குலசேகர, திஸர பெரேரா, அகில தனஞ்சய, அஜந்த மெண்டிஸ், ஜீவன் மெண்டிஸ், சுரங்க லக்மால், ரங்கன ஹேரத், குஷால் ஜனித் பெரேரா, ஷமிண்ட எரங்க.




## பி.பி.எல் தொடரில் விளையாட பாக்.வீரர்களுக்கு அனுமதி மறுப்பு

வங்கதேசத்தின் ரி20 தொடரான பங்களாதேஷ் பிறீமியர் லீக் (பி.பி.எல்) தொடரில் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. பங்களாதேஸ் கிரிக்கெட் சபைக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துக்குமிடையிலான முறுகலையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் சுற்றுலாவைத் தற்போதைய நிலையில் மேற்கொள்ள முடியாது என்றும், பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைகள் தொடர்பான முன்னேற்றம் ஏற்பட்டதன் பின்பே அச்சுற்றுலாவை மேற்கொள்ள முடியும் என்று பங்களாதேஸ் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கூறுகையில், பாகிஸ்தானில் பாதுகாப்புப் போதுமானதாக இல்லை என்ற பங்களாதேஸ் கிரிக்கெட் சபைத் தலைவரின் கருத்து தவறானது.

அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி பாதுகாப்புச் சிறப்பானதாகக் காணப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

மேலும், பங்களாதேஸ் கிரிக்கெட் சபை, பங்களாதேஸ் அரசு இணைந்த குழுவொன்று பாகிஸ்தானின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய விஜயம் செய்து அக்குழு திருப்தி தெரிவித்திருந்தாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே, இந்தியாவின் பிறீமியர் லீக் தொடரான ஐ.பி.எல் ரி20 தொடரிலும் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெக்ராத்துக்கு ஐ.சி.சி கௌரவம்



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் மெக்ராத் ஐ.சி.சி "ஹால் ஆப் பேம்" பட்டியலில் சேர்க்கப்பட்டார். கிரிக்கெட்டில் சாதித்தவர்களை கௌவரவிக்கும் விதமாக சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி.) சார்பில் "ஹால் ஆப் பேம்" பட்டம் வழங்கி கவுரவிக்கப்படுவார்கள்.

இதுவரை கபில் தேவ், சுனில் கவாஸ்கர், பிஷன் சிங் பேடி உட்பட 69 பேர் இப்பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். இதில் இரண்டு வீராங்கனைகளும் அடங்குவர்.

தற்போது அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் மெக்ராத், 42, இப்பட்டியலில் சேர்க்கப்பட்டார். இதன்மூலம் இவ்வரிசையில் இடம் பெறும் 68ஆவது வீரரானார்.

கடந்த 1993 இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் காலடி வைத்த இவர், 124 டெஸ்ட் (563 விக்கெட்), 250 ஒருநாள் (381 விக்கெட்) மற்றும் 2 சர்வதேச ரி20 (5 விக்கெட்) போட்டிகளில் விளையாடி உள்ளார். இவர், 2007இல் ஓய்வை அறிவித்தார்.

இவருக்கு இவ்விருது, ஜனவரி 4ஆம் திகதி சிட்னியில் அவுஸ்திரேலியா- இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது வழங்கப்பட உள்ளது.

தவிர இவர், இந்த ஆண்டு இப்பட்டியலில் இடம் பெற்ற மூன்றாவது வீரரானார். கடந்த செப்டம்பர் மாதம் நடந்த ஐ.சி.சி விருது வழங்கும் நிகழ்ச்சியில் மேற்கிந்திய தீவுகளின் லாரா, இங்கிலாந்தின் எனிட் பேக்வெல் ஆகியோருக்கு இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதுகுறித்து மெக்ராத் கூறுகையில், ஐ.சி.சி "ஹால் ஆப் பேம்" பட்டியலில் இடம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எனது நண்பர்கள், குடும்பத்தினருடன் இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றார்.

## ஹாடினுக்கு கெய்ல் பதிலடி




அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிக்-பாஷ் ருவென்ரி-20 தொடரில், சிட்னி தண்டர் அணிக்காக விளையாடுகிறார் மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல். ரூ. 1.37 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட இவர், கடந்த ஐந்து போட்டிகளில் மொத்தம் 70 ஓட்டங்கள் தான் எடுத்துள்ளார்.

இதனிடையே சிட்னி சிக்சர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 9 ஓட்டங்கள் எடுத்த கெய்ல், பந்துவீச்சில் எதிரணி அணித் தலைவர் ஹாடினை, ஆட்டமிழக்க செய்த பின் கங்னம் ஸ்டைலில் நடனம் ஆடினார். இதுகுறித்து பின் ஹாடின் கூறுகையில், நன்றாக விளையாடிய நிலையில் ஆட்டமிழந்தது ஏமாற்றம் தான். இருப்பினும், துடுப்பாட்டத்தில் சொதப்பும் கெய்ல் வாங்கிய பணத்துக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக நடனம் ஆடினார். இது அந்த அணி ரசிகர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்றார். இதற்கு பதிலடி கொடுத்து டுவிட்டர் இணையத்தில், ஹாடின் ஆட்டமிழந்தது எனது தவறில்லை, அவரது தவறுதான். ஹாடின் வேலையை சரியாக செய்ய வேண்டும். இதை விட்டு விட்டு நான் வாங்கும் பணம் குறித்து பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## ரஞ்சி கிண்ணப் போட்டியில் சச்சின்

ரஞ்சிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் மும்பை அணிக்காக களமிறங்க இருக்கிறார். ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்த பின்னர் சச்சின் பங்கேற்கும் முதல் கிரிக்கெட் போட்டி இது. இதனால் அவரது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மும்பை அணி காலிறுதி ஆட்டத்தில் பரோடா அணியை எதிர்கொள்கிறது. இது தொடர்பாக மும்பை கிரிக்கெட் சங்க துணை செயலாளர் நிதின் தலால் கூறியது:

ரஞ்சிக கிண்ணக் காலிறுதி ஆட்டத்துக்கான அணி வியாழக்கிழமை தேர்வு செய்யப்பட இருக்கிறது. பரோடா அணிக்கு எதிரான ஆட்டத்தில் சச்சின் கண்டிப்பாக இடம் பெறுவார்.

சகீர்கானை தேர்வு செய்வது குறித்து முடிவு செய்யவில்லை. அவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் மருத்துவரிடம் ஆலோசனை பெற்று அவரை அணிக்கு தேர்வு செய்வது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.




## பாகிஸ்தானின் அடுத்த அக்ரம்?


சென்னையில் நடந்த முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தானின் வெற்றிக்கு ஆணிவேராக இருந்தவர் இடக்கை வேகப்பந்து வீச்சாளர் ஜூனைட் கான். அவர்தான் இந்தியாவின் துடுப்பாட்ட வரிசையை தகர்த்தெறிந்தார்.

ஷேவாக், விராட் கோலி, யுவராஜ்சிங், ரோகித் ஷர்மா ஆகியோரை வரிசையாக காலி செய்தார். இதில் மூன்று பேர் கிளீன் போல்ட் ஆனார்கள். இப்படியே அவர் விளையாடினால் அடுத்த வாசிம் அக்ரமாக உருவாகுவார் என்று பாகிஸ்தான் வீரர் யூனிஸ்கான் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து யூனிஸ்கான் கூறியதாவது:-

ஜூனைட் கான் தொடர்ந்து சிறப்பாக பந்து வீசி வருவதை பார்ப்பதற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இது அவருக்கும், பாகிஸ்தான் அணிக்கும் நல்ல அறிகுறியாகும். இதே போன்று அவர் தொடர்ந்து பந்து வீச்சில் மிரட்டினால், இடக்கை பந்து வீச்சு ஜாம்பவான் வாசிம் அக்ரம் போன்று உருவாக முடியும். இவ்வாறு கூறினார் யூனிஸ்கான்.

## சர்ச்சை தீர்ந்தது



பார்முலா-1 கார்பந்தய வீரர் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டலுக்கு எதிரான புகாரை சர்வதேச கார்பந்தய கூட்டமைப்பு (எப்.ஐ.ஏ..), தள்ளுபடி செய்தது. இதையடுத்து இவர் சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டார்.

"பார்முலா-1" கார்பந்தயத்தின் கடைசி சுற்றில், "ரெட் புல் ரேசிங் ரெனால்ட்" அணியின் ஜேர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல், விதிகளை மீறி செயல்பட்டதாக சர்ச்சை எழுந்தது. இதுகுறித்து பெராரி அணி சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதை விசாரித்த எப்.ஐ.ஏ., கூறுகையில்," வெட்டல் விதிகளின்படிதான் செயல்பட்டார்," என தெரிவித்துள்ளது. இதுகுறித்து கார்பந்தய இயக்குனர் சார்லியே ஒயிட்டிங் கூறுகையில்,"

கொடி கம்பத்தில் விளக்குகள் பொருத்தப்பட வில்லை எனில், வீரர்கள் தங்களுக்கு தரப்படும் முதல் "சிக்னலை" பொறுத்து செயல்படலாம். வெட்டல் விஷயத்தில் முதலில் பச்சை கொடி, விளக்கு காட்டப்பட்டு பின், மஞ்சள் விளக்கு காட்டப்பட்டுள்ளது. இதனால், வெட்டல் பச்சை கொடியை கணக்கில் எடுத்துக் கொண்டு, முன்னால் சென்ற வீரரை முந்தினார். இதில் தவறு ஏதும் இல்லை," என்றார். இதையடுத்து, பெராரியின் புகாரை எப்.ஐ.ஏ., தள்ளுபடி செய்தது. இதனால், "ஹாட்ரிக்" பட்டம் வென்ற வெட்டலின் சாதனைக்கு வந்த ஆபத்து நீங்கியது.



## ஷரபோவா விலகினார்


அவுஸ் திரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் நகரில் சர்வதேச டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இருந்து, காயம் காரணமாக ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா விலகியுள்ளார்.

ஷரபோவாவின் வலது தோள் பட்டை எலும்பு பகுதியில் காயம் ஏற்பட்டதால் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். ஏற்கனவே இவர், கடந்த ஆண்டு இத்தொடரில் காயம் காரணமாக விலகினார்.

**புதுவருட ஆரம்பம் அதிர்ச்சி**

# பிலாண்டரின் வேகத்தில் சுருண்டது நியூசிலாந்து

தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் போன நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸை இரு மணி நேர இடைவெளியினுள் 19.2 ஓவர்களில் 45 ஓட்டங்களுடன் முடித்துக் கொண்டது.



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 இருபது-20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இருபது-20 தொடரை தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்றைய தினம் கேப்டவுண் நியூலாண்ட் மைதானத்தில் ஆரம்பமாகியது.


புத்தாண்டில் புதிய அணித் தலைவருடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு இது அதிர்ச்சித் தொடக்கமாகும்.

ஆரம்பவீரர்களாக களமிறங்கிய மார்டின் கப்ரில் (1), புதிய அணித்தலைவர் பிரெண்டன் மக்கலம் 7 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இவர்களைத் தவிர மற்றைய முன்வரிசை வீரர்களும் ஒற்றை ஓட்டங்களில் வெளியேற, பின் வரிசை வீரர்களும் தென்னாபிரிக்காவின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆட்டமிழந்தனர்.

அதிகூட்சமாக வில்லியம்ஸன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக வேர்ணன் பிலாண்டர் 6 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும்,





மோர்னி மோர்க்கல் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெய்ன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்பவீரரான தென்னாபிரிக்காவின் தலைவர் ஸ்மித் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தாலும், பின்னர் வந்த வீரர்கள் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அம்லா 66 ஓட்டங்களையும், ஜக் கலீஸ் 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்ததுடன், அல்வி ரோ பீற்றர்சன் 103 ஓட்டங்களுடன், ஏ.பி.டி. வில்லியர்ஸ் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

போட்டியின் 2-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இந்தியா பதிலடி கொடுக்குமா? பாகிஸ்தானுடன் இன்று மோதல்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. இரு அணிகள் இடையிலான இரண்டு இருபது-20 போட்டித் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

மூன்று ஒருநாள் போட்டித் தொடரில் கடந்த 30ஆம் திகதி சென்னையில் நடந்த முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 வது ஒரு நாள் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று நடக்கிறது.

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இந்திய அணி பதிலடி கொடுக்குமா? என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் தொடரை இழக்காமல் இருக்க இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறவேண்டிய நெருக்கடியும் இந்திய அணிக்கு உள்ளது. அதற்கு ஏற்ற வகையில் வீரர்கள் அனைவரும் முழுத்திறமையை வெளிப்படுத்தி விளையாட வேண்டும். சென்னைப் போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு மோசமான துடுப்பாட்டமே காரணம்.

அணித் தலைவர் தோனி, ரெய்னா தவிர முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் மோசமாக விளையாடினார்கள்.

காயமடைந்துள்ள விராட் ஹோலி முழு உடல் தகுதியுடன் இல்லை. விராட் ஹோலி இடம்பெறாத பட்சத்தில் ரவீந்திர ஜடேஜாவுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

ஒருவேளை விராட் ஹோலி ஆடும் பட்சத்தில் ஜடேஜாவுக்காக ரோகித் சர்மா கழற்றி விடப்படலாம்.

இதேவேளை, இந்தியாவின் நடுத்தரவரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடவேண்டிய நெருக்க டியில் உள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சு இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலானது.

பாகிஸ்தான் அணி இன்றைய ஆட்டத்தில் வென்று தொடரைவெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

பாகிஸ்தான் அணி 2005-ம் ஆண்டு 6 போட்டிகொண்ட ஒருநாள் தொடரை 4-2 என்ற கணக்கில் கைப்பற்றியது. தற்போது 8 ஆண்டுகளுக்கு பிறகு ஒருநாள் தொடரை கைப்பற்றிவிட வேண்டும் என்ற வேட்கையில் உள்ளது. ஆகையால் இன்றைய போட்டியில் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.

# இலங்கை அணி வெற்றிக்கு போராடும்

## - மஹேல ஜெயவர்த்தன



அவுஸ்ரேலிய அணிக்கெதிராக இன்று ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற முயற்சிக்கும் எனவும் அதற்கான நம்பிக்கை காணப்படுவதாகவும் இலங்கை அணியின் தலைவர் மஹேல் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை -அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஓர் இன்னிங்ஸ் 201 ஓட்டங்களால் படுதோல்வியடைந்திருந்த நிலையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வியை மறக்கும் முகமாக நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, எவ்வாறு அது இடம்பெற்றது எனவும் எவ்வாறு அதை எதிர்காலத்தில் தடுப்பது என்பது தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்தியதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும் தென்னாபிரிக்காவில் வைத்து செஞ்சூரியன் மைதானத்தில் இரண்டரை நாட்களில் தோல்வியைச் சந்தித்த பின்னர் மீண்டு வந்த இலங்கை டேர்பன் மைதானத்தில் வைத்து வெற்றியைப் பெற்றுக் கொண்டதை ஞாபகப்படுத்திய மஹேல ஜெயவர்த்தன, இலங்கை அணியால் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்படுவதாக தெரிவித்தார்.

இந்த அவுஸ்ரேலிய அணி பலமான அணி எனத் தெரிவித்த அவர், ஆனால் இலங்கை அணி தனது பலத்திற்கு ஏற்றவாறு போட்டிகளில் பங்குபற்றுமாயின் நிச்சயமாக அவுஸ்ரேலியாவின் சவாலை எதிர்த்து வெற்றிபெற முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

# மண்டைதீவில் இன்று மௌனப் பேரணி

(மண்டைதீவு)

4 வயதுச் சிறுமி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளியை கண்டறிந்து கைது செய்வதை வலியுறுத்தியும் மண்டைதீவு பொது அமைப்புகள் இணைந்து இன்று மௌனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளன.

இவ் மௌனப் பேரணியில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)


## தவறிவிட்டது

கடந்த 31ஆம் திகதி மதியம் 12.35 க்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் 1 பவுண் தங்க கைச்செயின் ஒன்று முல்லைத்தீவு உண்ணாப்புலவு சந்தியில் இருந்து P.W.D சந்திக்கிடையில் தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு
கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு.
0770426226
(சி-2018)

## DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

A/L - 2015
கலை, வர்த்தகம்

பொருளியல்
S.வரதராஜன்
கணக்கீடு
P.பகீரதன்
வணிகக்கல்வி
V.முரளி
தமிழ்
K.சந்திரலிங்கம்
புவியியல்
P.S.குமரன்
அரசியல்
K.சுகாஷ்
இந்து நாகரிகம்
T.ஶ்ரீஸ்
வரலாறு
R.R.ஆனந்தன்
அளவையியல்
T.நீதன்
நாட. அரங்கியலும்
S.R.றமேஷ்

ஆரம்பம்
05.01.2013
சனி - காலை - 9.00
(சி-2015)

## API BABY MART

சகலவிதமான பாடப்புத்தகங்கள், குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் மழலைகளுக்கான ஆடைகள், CD கள் மற்றும் இன்னும் பல பொருட்களையும் எம்மிடம் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
267, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0750519482
(சி-2000)


# ஐ.நாவுக்கு பதிலளி...

தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அவதானத்துடன் செயல்படுவதாக அவர் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

எனவே குற்றப் பிரேரணையை மீள ஆராயுமாறு தாம் கோருவதாக விசேட பேச்சாளர் கேப்ரியலா க்னவுல் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தெரிவுக்குழு அறிக்கை அரசியல் மயப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பில் முழுமையான விடயங்களை ஆராயாமல் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பேச்சாளர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார். (செ)

## யாழ்.மாநகர...

தலைமை பொறுப்பதிகாரி சமன் சிகேராவிற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அத்துமீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர சபையினால் நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் தவிர வேறு இடங்களில் விளம்பர காட்சிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டாம் எனவும் யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-4)

## கூட்டமைப்பு இன்று...

நீதிமன்றத்தை எதிர்நோக்காமல் அவரை பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது என்றும் நீதிமன்றத்தை புறக்கணிக்கும் ஒரு நடவடிக்கையின் அங்கமாக தமது கட்சி இருக்க விரும்பவில்லை என்றும் அனுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்.

இலங்கையில் நாடாளுமன்ற செயற்பாடுகளே கேலிக்கூத்தாகவிருக்கும்போது நாடாளுமன்றம்தான் அனைத்திலும் உயர்ந்தது என்று அரசு கூறுவதை எப்படி ஏற்க முடியும்?

நாடாளுமன்ற வழிமுறைகள் இலங்கையில் மதிக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அக்குழுவின் உறுப்பினராக இருந்த ஜோன் அமரதுங்க மற்றும் லக்ஸ்மன் கிரியல்ல நீதிமன்றத்தின் அறிவிப்பை ஏற்று தமது கருத்துக்ளை தெரிவிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் செல்லமாட்டார்கள் என அக்கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதற்கோ அல்லது தலைமை நீதிபதியை பதவி நீக்கும் முயற்சிகளுக்கோ உடன்படவில்லை எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சொந்த நலன்களுக்காகவே அரசு ஒரு அரசியல் வழிமுறையைக் கையாண்டது என்றும் தமது உறுப்பினர்கள் அத்தெரிவுக் குழுவிலிருந்து விலகியும் விட்டார்கள் என்றும் ஐ. தே.கவின் பொதுச் செயலர் கூறியுள்ளார். (ஏ)

## இலங்கை-சீனா...

தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை போன்ற நாடுகளின் ஒத்துழைப்புடன் சீனா இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி கடலாராய்ச்சியில் ஈடுபடுமாயின், அது இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இந்தியா கருதுகிறது. (செ)

## மருத்துவர்...

எதிர்வரும் நாட்களில் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவிற்கு கொண்டுசெல்லப்பட்டு அவர் விசாரணைக் குட்படுத்தப்படலாம் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவை தொடர்பில் யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் எஸ்.நிமலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் இன்றுவரை(நேற்று) நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றும் தொடர்ந்தும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(எ-4)

## சிலிண்டர்களுடன்...

பயணத்தின்போது வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம், கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் மதியம் 1 மணியளவில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ் அனர்த்தம் நிகழ்ந்த இடத்திலிருந்து சில மீற்றர்கள் தொலைவில் தருமபுரம் வைத்தியசாலை அமைந்துள்ளது.

தெய்வாதீனமாக மேற்குறித்த சிலிண்டர்கள் எவையும் வெடிப்பை ஏற்படுத்தவில்லை.

அருகில் வைத்தியசாலையும், சனநடமாட்டமும் உள்ள அப் பகுதியில் சிலிண்டர்கள் வெடித்திருந்தால் பேரழிவு ஏற்பட்டிருக்கக் கூடும்.

எனவே இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் சிலிண்டர்களை எடுத்துச் செல்வதை உரியவர்கள் தவிர்க்க வேண்டும் என அப் பகுதி மக்கள் விசனத்துடன் கோரியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-85)

## நீதிமன்றம் சென்...

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு சார்பில் விஜித ஹேரத் தெரிவுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

நீதிமன்றம் விடுத்துள்ள அழைப்பாணைக்கு அமைய அவர் இன்று நீதிமன்றில் ஆஜராவார் என பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (செ)


A/L 2015
கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## NEW ECONOMICS COLLEGE
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

A/L 2015
ஆரம்பம் : ஜனவரி 05 காலை 8.00

வர்த்தகப்பிரிவு

| | |
|---|---|
| கணக்கீடு | : K.பாலகஜன் |
| பொருளியல் | : NB.கஜீதரன் |
| வணிகக்கல்வி | : S.K.பாலசபேஸ் |
| | S.யசோதரன் |

கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஶ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : N.சபரிதன் | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : R.R.ராஜ் |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |


# நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக வளாகத்தில் உள்ள நல்லூர்க் கோட்டப் பணிமனையில் இடம்பெறும்.

கோட்டத்தில் படிவம் ஒன்றைப் பெற்று அதனை பாடசாலைக்கு எடுத்துச் சென்று பூரணப்படுத்தி அதனை உடனடியாகக் கோட்டத்தில் ஒப்படைப்பதற்கு ஏற்றவாறு பொருத்தமான ஆசிரியர் ஒருவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா கேட்டுள்ளார்.

அதிபர்கள் கூட்டத்தில் பங்கேற்றுக் கொண்டிருக்க, குறித்த ஆசிரியரே படிவத்தைப் பூரணப்படுத்தி அதனை உடன் ஒப்படைக்கும் பணியை செய்யவுள்ளதால், அதற்கேற்ற ஒழுங்கை அதிபர்கள் செய்யுமாறும் கேட்கப் பட்டுள்ளது. (ந)


இந்து நாகரிகம்
திரு.எஸ்.ஜெயக்குமார்
Paper Class
ஆரம்பம் : தை 5 - 10 am
வெளி மாணவர், 2012 பரீட்சை எடுத்த மாணவர்களும் பங்குபற்றலாம்
யூனிவேர்சல்
கந்தர்மடம்

## BEACON
யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி)

A/L 2015
கலைப்பிரிவு
ஆரம்பம்: 05.01.2013
சனிக்கிழமை -8 மணி

| | |
|---|---|
| தமிழ் | : நாகதமிழிந்திரன் |
| | ஜீவானந்தன் |
| அளவையியல் | : எஸ்.எஸ்.மனோகரன் |
| இந்துநாகரிகம் | : ரமணன் |
| வரலாறு | : விக்கி |
| புவியியல் | : எஸ்.எம்.ஜின்சியா |
| அரசியல் | : மனோகரன் |

(1375)

## B.A புதிய பிரிவுகள்

- B.A. - Part - I (யாழ்ப்பாணம்)
- B.A. (பேராதனை) (கல்வியாண்டு - 2011/2012)
- B.A. (பேராதனை) (கல்வியாண்டு 2012/2013)

ஆரம்பம் : 05.01.2013
சனிக்கிழமை
(1376)
BEACON
யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி)

## சுவாமி ஐயப்பனின் ஜெயந்தி தின விழா (பிறந்த தினம்) மார்கழி உத்தரம்





அகில இலங்கை உரும்பிராய் தெற்கு சாட்டுபத்தூர் என விளங்கும் சிவதர்ம சாஸ்தா ஆலயத்தில் 03.01.2013 வியாழக்கிழமை இன்று மாலை 4.30 மணிக்கு 108 சங்குகளால் அபிஷேகம், பூசை எம்பெருமான் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மயில் சோடினையில் வரும்போது மூளாய் சிவகுமார் குழுவினரும் சாவகச்சேரி பஞ்சாபிகேசன் பேரப்பிள்ளைகள் இரட்டையர்களும் சேர்ந்து மங்கள இசைபொழிய எம்பெருமான் வீதி உலா வருவார். தொடர்ந்து பஜனை, படிப்பூசை, அர்த்தஜாம பூசை - 7.45 மணிக்கு , 8 மணிக்கு ஹரிவராசனம்

ஆதீன கர்த்தாக்கள்,
தானு-வாசுதேவக்குருசுவாமி,
வா-ஜெயவஸ்தாங்க குருசுவாமி (1372)

சுவாமி சரணம்
அனைவரும் வாங்க ஐயன் அருள் பெறுக

இங்ஙனம் : உபயகாரர்கள்
திரு.தேவகுருநாதர், கல்வியங்காடு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.